முரசொலி

மு.கருணாநிதி

வார இதழ்

முரசு 4 | 13-12-57 | வெள்ளி | ஒலி 34



உ

அன்புள்ள பொன்முடி!

சென்ற மடலில் இரு நெடுஞ்செழியன்களை உனக்குக் காட்டினேன். இப்போதுள்ள நெடுஞ்செழியன் காவலர் மட்டுமல்ல; நாவலர் என்றேன். அன்றிருந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் காவலன் மட்டுமல்ல; பாவலனாகவும் திகழ்ந்தான் என்பதனை புறநானூற்றில் ஒளி விடுகின்ற அவனது பாட்டொன்றால் அறிய முடிகிறது.

"உற்றுழி உதவியும் உறுபொருள்
கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல்
நன்றே.
பிறப்போ ரன்ன உடன் வயிற்றுஞ்
சிறப்பின் பாலாற் றாயும் மனந்
திரியும்
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது
அவருள்
அறிவுடை யோனா றரசுஞ்
செல்லும்
வேற்றுமை தெரிந்த
நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருவனும் அவன்
கட்படுமே."

கல்வியின் உயர்வு குறித்து ஆரியப்படை கடந்தோன் தீட்டிய கருத்தே இஃது!

ஒரு வயிற்றில் பிறந்த மக்களிலேகூட கற்றவன், கல்லாதவன் என்ற அளவில் தாயின் மனமும் வேறுபடும். ஒரு குடியிற் பிறந்த பலரில் மூத்தோனைத்தான் சிறப்பிப்பது என்றில்லாது அவர்களில் அறிவுடையோன் சென்ற நெறியில் தான் அரசும் செல்லும்.

வேறுபாடு கூறப்படும் நாலு குலங்களிலும் கீழ்க்குலம் எனப்படுபவன் கற்றவனாகி விட்டால் மேற் குலத்தோன் அவனை வழிபட்டே தீரவேண்டும்.

இத்தகைய பெருஞ் சிறப்புக்களைக் கொண்டது கல்வியறிவு என்பதைத்தான் நம் முன்னோன் கடைச் சங்க காலத்துப் பாண்டியன், புறப் பாட்டில் தெளிவுபடுத்தியிருக்கிறான். ஆண்டாண்டு காலமாக அடிமைப் படுத்தப்பட்டு—மிதிக்கப்பட்டு—நசுக்கப்பட்டு—தேய்க்கப்பட்டு — தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் குலத்திலே பிறந்த அம்பேத்காரிடம் அரசியல் சட்டமியற்ற அறிவுரை கேட்டது, இந்தத் துணைக் கண்ட அரசு என்பதனை எண்ணுமிடத்து பாண்டியனின் கூற்று எத்துணை மெய்யாகிறது எனச் சொல்லவும் போமோ, பொன்முடி! கலவி தந்த உணர்வாலும், ஊக்கத்தாலும், தன்மான எண்ணத்தாலுமன்றோ இன்றைய ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள்,

"மேலிருப்போரெல்லாம் மேலோ
ரல்லவே
கீழிருப்போர் எல்லாம் கீழோ
ரல்லவே"

என்று புரட்சி கீதம் இசைத்துக் கொண்டு சுயமரியாதை நடை பயிலுகிறார்கள்.

"ஆதி திராவிடர்" என்ற சொல்லைக்குறிப்பிட்டதும் நான் எங்கேயோ இழுத்துச் செல்லப் படுகிறேன். உன்னையும் இழுத்துக் கொண்டு போகிறேன்; கொஞ்சம் என்னோடு வா!

சென்னை மாநிலத்து மந்திரிகளில் ஒருவரான உயர் திருவாளர் கக்கன் அவர்கள் போகுமிடமெல்லாம் 'அரிஜனங்களுக்கு அபயம் அளிக்கக்கூடிய ஆண்டவன் காங்கிரஸ் கட்சி தான்' என்று கூறி வருகிறாராம். அதோடு நிறுத்தி விடுகிறார் என்றால் பரவாயில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அரிஜனங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்து யாரும் ஏமாறாதீர்கள்—என்றும் எச்சரிக்கை செய்து வருகிறார் என்பதையும் நீ அறிவாய். அது குறித்து நான் சில இடங்களில் பேச நேரிட்டது.

"தாழ்த்தப்பட்ட மக்களை அரிசனங்கள் என்ற பக்தி நிறைந்த அலங்காரப் பெயரால் அழைத்து அவர்களை ஏமாற்றுகிறவர்கள் நாங்கள் அல்ல! அவர்களுக்குரிய ஆதி திராவிடர் என்ற இனப் பெயரால் அழைத்து, திராவிட என்ற சொல்லையே முதலாவதாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் கண்டு, உண்மையிலேயே அவர்களது நல்வாழ்வுக்கும் உரிமைக்கும் பாடுபட்டு வருகிறவர்கள் நாங்கள்."

என்ற கருத்தினை நான் வெளியிட்டேன். இக் கருத்து 'நம் நாடு' இதழிலும் வெளிவந்தது. ஆனால் "ஆதி திராவிடர் என்ற பெயரால் அழைத்து" என்பதற்குப் பதில் "ஆதி திராவிடர் என்ற பெயரையே வைத்து" என்று நிருபர் எழுதிக் கொடுத்து விட்டார் போலும். இது ஒன்றும் தவறில்லையென்பதும், இதனால் ஆதி திராவிட மக்களுடைய மனம் புண்பட்டுவிடாது என்பதும் உனக்கும் எனக்கும் ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கும் நன்கு தெரியும். கழகத்தின் பண்பினை யுணர்ந்த ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் தலைவர்களும், நங்கவரம் போன்ற இடங்களில் ஆதி திராவிட மக்களுக்காக கழகத்தினர் மேற்கொண்ட பணியினை மதிக்கின்ற நல்லவர்களும் இதனைக் குற்றமெனக் கூறமாட்டார்கள். ஆனால்; நண்பா—யாரோ ஒரு தோழர் புன்னோவியம் ஒன்றினை எனக்குத் தீட்டி—அதில்;

"அரிசனம் என்ற அலங்காரப் பெயரை நீக்கி 'ஆதி திராவிடர்' என்ற பெயரை வைத்தவர்களே நாங்கள்தான்" என்று பேசியிருக்கிறீர்கள். இது ஆதி திராவிட மக்களை மிகவும் புண்படுத்துவதும், அச் சமுதாயத்தைக் கேவலப்படுத்துவதாகவும் இருக்கிறது,"

—என்றும் ஆத்திரத்தை வாரி இறைத்திருக்கிறார். நீ எண்ணுவாய்; ஓகோ, அரிசனம் என்ற பெயர்தான் அவர்களுக்குப் பிடிக்கிறதாக்கும்; ஆதிதிராவிடர் என்ற பெயர் அவர்களைக் கேவலப்படுத்துவதாகத் தோழர் கருதுகிறார் போலும் என்று! இல்லை-இல்லை-கேவலம் அதிலே வரவில்லை அவருக்கு! அதுவரையில் நமக்கு மகிழ்ச்சி தான். 1899-ம் ஆண்டிலேயே ஆதித்திராவிட மகாஜன சபை என்ற பெயரால் ஒரு சபையை வைரக்கண் வேலாயுதப் பாவலர், அரங்கை தாசப் பண்டிதர்

[தொடர்ச்சி பக்கம்—6]

நீட்டோலை

மு.கருணாநிதி

சர்வாதிகாரச் சட்டம் நீள்கிறது; 'பாஸ்டிலி'யாகிறது பாரதம்!

இந்த அரசாங்கம் ஒழுங்கை நிலைநிறுத்துவதிலும் சமூக விரோத சக்திகளை ஒடுக்குவதிலும் உண்மையில் அக்கரை கொண்டிருந்தால் ராமநாதபுரம் கலவரங்களைத் தூண்டிவிட்ட சென்னை காங்கிரஸ் மந்திரிகள் பேரிலேயே தடுப்புக் காவல் சட்டத்தைப் பிரயோகித்திருக்க வேண்டும்.

—பார்வதி கிருஷ்ணன்

★

எந்த முதல் மந்திரியாவது இச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட வேண்டுமென்றால் அது பஞ்சாப் முதல் மந்திரியாகத்தான் இருக்க முடியும்.

—ஜனநாயக சங்கத் தலைவர்

★

எதைத் தடுக்க வேண்டுமென்று சர்க்கார் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததோ அது இந்தச் சட்டத்தினால் அதிகரிக்கவே செய்திருக்கிறது.

அரசியல் எதிர்க் கட்சிக்காரர்கள்மீது பழிவாங்குவதற்கே இம் மசோதா கொண்டுவரப்படுகிறது.

இந்தச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டவர்களின் ஜாபிதாவை சர்க்கார் வெளியிட்டது. அதில் மக்களின் நலவுரிமைக்கு விரோதமாக அரிசியைக் கள்ளச் சேமிப்பு செய்து கொள்ளை லாபம் அடித்தவர்கள் ஒருவராவது காவலில் வைக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. எந்த ஒரு வர்த்தகச் சூதாடியோ, பங்கு மார்க்கெட்டில் கள்ளத்தனம் செய்து நமக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதற்குக் கஷ்டத்தை ஏற்படுத்தும் எந்த ஒரு சமூக விரோதியோ இந்தச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்படவில்லை. ஒரு சமயம் இந்த நடவடிக்கைகளெல்லாம் சாதாரண, தினந்தோறும் நடைபெறுவது போன்ற சகஜமான நடவடிக்கைகள் போலும்! சகஜமான வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டு பண்ணி, சகஜமான பட்டினியை ஏற்படுத்தி, சகஜமான மரணத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் போலும்! இவைகளெல்லாம் சர்க்காரால் சமூக விரோத நடவடிக்கைகளாகக் கருதப்படுவதில்லை.

ஆனால் ஒரு தொழிலாளி தன் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு வேலை நிறுத்தம் செய்தால் அது உடனே ஒரு அசாதாரணமான நடவடிக்கையாகி விடுகிறது. உடனே தடுப்புக் காவல் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு விடுகிறது.

—டாங்கே

★

அவசர நிலைமைகளில்—அதாவது யுத்தம்; அல்லது உள்நாட்டுப் போர் ஆகிய சந்தர்ப்பங்களில்தான் இச் சட்டம் இயற்றப்படலாமென்பது அரசியல் சட்ட நோக்கம். ஆனால் அந்தச் சந்தர்ப்பங்கள் இப்போது இல்லை. எனவே சட்டத்தை நீடிக்கும் யோசனையைக் கைவிட வேண்டும்.

—கிருபளானி

★

—இவ்விதம் பாராளுமன்றத்திலேயுள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒருமித்து எதிர்த்தும் காங்கிரசின் 'மெஜாரிட்டி' பலத்தினால் 'கருப்புச் சட்டம்' என்று எல்லோராலும் வர்ணிக்கப்படும் தடுப்புக் காவல் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

—இந்தச் சட்டத்தின்படி அரசாங்கம் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் சிறையில் வைக்கலாம். சட்ட வரம்புக்குட்பட்ட விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்கள் கோர முடியாது.

அதனால்தான் எல்லாச் சுதந்தரமும் இருக்கின்றது என்று சொல்லப்படுகிற இந்தப் பாரத பூமியிலே ஷேக் அப்துல்லா ஆண்டுக் கணக்கில் எந்தவித விசாரணையும் இன்றி சிறைச்சாலையிலே இருக்கிறார்!

புரட்சிக்கு முன்பு இருந்த பிரெஞ்சு நாட்டைப் பற்றி வரலாறு படித்தவருக்கு நன்கு தெரிந்திருக்கும்.

அங்கே எவனாவது ஒருவன் பிரபுவுக்கு அடங்கி நடக்காமல் போனால் போதும்; மறுகணமே அந்தப் பரிதாபத்திற்குரியவன் பாஸ்டிலி சிறைக்குள்ளே அனுப்பப்படுவான்!

அந்தச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு!

அதுதான் மரணம்! மரணம் ஒன்றுதான் பாஸ்டிலிக்குள் கைதியாக நுழைந்தவர்களுக்கு விடுதலை வழங்க முடியும்!

விசாரணை; வழக்கு; நீதி மன்றம்; சாட்சிகள்; தீர்ப்பு—இவையனைத்தும் அந்தக் கைதிக்கு மறுக்கப்படும்! இந்துப் புராணம் குறிப்பிடுகிறபடி எமலோகத்தில் சித்திரகுப்தன் நடத்துகிற விசாரணைதான் பாஸ்டிலிக்குள் தளளப்படுகிறவர்கள் பெறுகின்ற விசாரணையாகும்!

மாண்டு மறைந்துபோன அந்த லூயி காலத்து அடக்குமுறை தர்பாரின் கடைசி வாரிசுதான் இந்தத் தடுப்புக் காவல் சட்டம்!

அன்று பாஸ்டிலிக்குள் தள்ளப்பட்டவர்களது நிலையும் ஒன்றுதான்; இன்று தடுப்புக் காவல் சட்டப்படி சிறைச்சாலைக்குள்ளே தள்ளப்படுகிறவர்களது நிலையும் ஏறத்தாழ ஒன்றுதான்!

—இருவருக்கும் விசாரணை கிடையாது; அரசாங்கத்திற்குப் பெரிய மனது வந்து விடுதலை கிடைத்தால்தான் விடிவு காலம் ஏற்படும்!

அதனால்தான் காஷ்மீரத்துச் சிங்கம் என்று பண்டிதரினால் பாராட்டப் பெற்ற அவரது ஆப்த நண்பர் ஷேக் அப்துல்லா லூயி மன்னனால் பாஸ்டிலியில் அடைக்கப்பட்ட கைதிபோல எந்தவித விசாரணையும் இன்றிக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்!

அதுபோல் அரசாங்கத்தை நடத்துகிற அரசியல்வாதிகளுக்குப் பிடிக்காத ஆயிரமாயிரம் ஷேக் அப்துல்லாக்களை பொது மக்கள் மத்தியில் நடமாடவிடாமல் தடுப்பதற்காகத்தான் இப்போது மீண்டும் தடுப்புக் காவல் சட்டத்திற்கான ஆயுள் நீடிக்கப்பட்டிருக்கிறது!

உலகத்தின் எந்த ஜனநாயக நாட்டோடும் ஒப்பிட்டு நோக்கக்கூடிய நீதி வழங்கும் அமைப்புகள் இந்திய உபகண்டத்திலே இருக்கின்றன.

அவற்றிலே பாரபட்சமின்றி நடுநிலைமை தவறாமல் துலாக்கோல் முனையிலே நின்று நீதி வழங்குவதற்குப் பெயர் பெற்ற நீதிபதிகள் அநேகம் பேர் இருக்கின்றனர்.

குற்றவாளிகளை வலை போட்டுத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவே ஆயிரக் கணக்கான போலீஸ்காரர்கள் பட்டிதொட்டிகளிலெல்லாம் இருக்கின்றனர்.

அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனை வாங்கித் தருவதற்காக அரசாங்கத்து செலவிலேயே 'பிராசிக்கியூட்டர்'கள் இருக்கின்றனர்!

அப்படித் தண்டிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புடனும் தப்பி

[தொடர்ச்சி பக்கம்—8]

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. மாநாடு

நாகர்கோயில் (கிருஷ்ணன் கோவில்) கலைவாணர் பந்தலில்

டிசம்பர் 27-28 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் நடைபெறும்.

தலைவர்: **ஈ. வி. கே. சம்பத்** எம். பி.

திறப்பாளர்: டாக்டர். **எஸ். அருணசலம்** எம். பி., பி. எஸ்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்வார்கள். இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

—கலைக்குமார், அமைப்பாளர், விளம்பரக் குழு. —சி. மனோகரன், வரவேற்புக் குழுத் தலைவர்.



வெள்ளி 13—12—57 சென்னை

பண்டிதர் பவனி!

வடக்கேயிருந்து இப்போது அதிகம் பேர் அடிக்கடி தெற்கே வந்து ' திக் விஜயம் ' செய்வது ஒரு வாடிக்கையாகி விட்டது.

தலைநகரம் டில்லியும் தெற்குமுனை கன்யாகுமரியும் இரு துருவங்களாக இருப்பதை உணர்ந்து கொண்டவர்கள் சரித்திரம் செதுக்கி வைத்திருக்கும் அந்த முரண்பாட்டை மூடி மறைப்பதற்காக இப்படி ஒரு புதிய ஏகாதிபத்திய வழியைக் கடைப் பிடிக்கிறார்கள்.

அண்டை நாடான பாகிஸ்தானத்திலே அதன் இரு பகுதிகளுக்கும் இடையே நிலவி வரும் தூரமும், பேதமும் நாட்டைத் துண்டாக்கும் அளவுக்கு வளர்ந்திருப்பதை ஏடுகளிலே படிக்கிறோம்.

கிழக்கு பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்து விடும் என்று அதன் முதல்வரே எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு அங்கே நிலைமை முற்றி இருக்கிறது.

இந்த எச்சரிக்கை மேற்கு பாகிஸ்தான்காரர்களுக்கு மட்டும் அதிர்ச்சி தரவில்லை; அதைவிட அதிக அளவு தூரத்தில் இருக்கும் தென்னகத்தைக் கட்டியாண்டு கொண்டிருக்கும் வடநாட்டு ஆட்சி பீடத்திற்கும் அது ஒரு அபாய அறிவிப்பாக மாறியிருக்கிறது.

ஏனெனில் இதுவரை வரலாற்றில் எந்தக் காலத்திலும் தலை பணியாத தமிழகத்தை அவர்கள் முதன் முறையாக தங்கள் பிடியின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்தத் தெற்கு முனையிலே திராவிடர் இயக்கத்தவரால் இப்போது விடுதலைக் கனல் மூட்டப்பட்டிருக்கிறது.

அந்தத் தென்னகத்திற்கும் வடநாட்டு ஆதிக்கத்தின் தலைநகரத்திற்கும் மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்கும் உள்ளதைவிட அதிகமான தூரம்!

ஆச்சாரியார் சென்னையின் முதலமைச்சராக இருக்கும்போதே கூறியிருக்கிறார், "நாங்கள் தூரத்திலிருக்கும் டெல்லி"யுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறதென்று!

அதனால்தான் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள தூரத்தையும் முரண்பாட்டையும் மக்கள் முன்னிலையில் மறைப்பதாக மாதத்திற்கு ஒருவர் வீதம் வடநாட்டுத் தலைவர்கள் இங்கே பவனி வரத் துவங்கியிருக்கிறார்கள்!

முதலில் தத்தார்; அவரைத் தொடர்ந்து பண்டிதர்; அடுத்ததாக தேனாம்பேட்டைக் கண்காட்சியைத் திறந்து வைக்க மொரார்ஜி தேசாய்—என்று வடநாட்டுத் தலைவர்கள் அட்டவணை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரியலூர் ரயில் விபத்து நேர்ந்து நூற்றுக் கணக்கானவர்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தபோது ஆறுதல் அளிக்காத பண்டிதர்—முதுகுளத்தூர் வகுப்புக் கலவரங்களுக்குப் பலியாகி அங்குள்ளோர் தவித்தபோது கண்ணீர் துடைக்க வராத பண்டிதர் இப்போது மட்டும் சென்னைக்கு விஜயம் செய்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது?

வந்தவர் அப்படி என்ன அதிமுக்கியமான காரியங்களைக் கவனித்திருக்கிறார்?

மதுரை காந்திக் கிராமத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்; சென்னையிலே குழந்தைகளின் பட மாளிகையைத் திறந்து வைத்திருக்கிறார்.

—அதற்காக அவசர அவசரமாக பழைய பாதைகளையெல்லாம் செப்பனிட்டார்கள்; சென்னை மௌண்ட் ரோடு நடுவிலே பண்டிதரின் பார்வைபடும் இடங்கள் எல்லாம் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதற்காக காய்ந்து போன செடிகளை யெல்லாம் அகற்றி; புதுச் செடிகளை நட்டு வைத்தார்கள்; அவருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் நூற்றுக் கணக்கான போலீஸ்காரர்களை சாலையின் இரு மருங்கும் நிற்க வைத்தார்கள்.

—இதுபோன்ற ஆடம்பரச் செலவுக்கு ஒரு வழி ஏற்படுத்த வேண்டும் என்பதற்குத்தான் அவர் வந்தாரோ என்னும் ஐயத்தைத்தான் கிளப்பியிருக்கிறது, பண்டிதர் பவனி!

வந்தவர் அதோடு மட்டும் நின்றாரா? வழக்கம்போல் நாக்கு அசைந்தபடியெல்லாம் வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்!

அதுமட்டுமல்ல; பண்டிதர் திருச்சியிலே ஒரு பொறுப்பான பதவியிலிருக்க வேண்டியவர் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மை வழியிலிருந்தும் தவறியிருக்கிறார்.

அவர் கூறியிருக்கிறார் :

" கொல்லு குத்து என்று அது (திராவிடர் கழகம்) பேசுகிறது. இவ்விதம் கூறுபவர் ஒன்று சிறைக்குச் செல்ல வேண்டும். அல்லது பைத்தியக்கார விடுதிக்குச் செல்ல வேண்டும். "

திருச்சியில் மட்டுமல்ல; சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள பைத்தியக்கார மருத்துவ மனைக்குப் பக்கத்திலே அமைந்துள்ள திடலில் நடைபெற்ற கூட்டத்திலும்கூட அவர் இந்த பாணியில்தான் பேசியிருக்கிறார் !

சாதாரண நாட்களில் அவர் இவ்விதம் பேசியிருந்தால் அது அவருக்கு வழக்கமாக வந்துபோகும் வியாதி என்று கூறமுடியும்.

ஆனால் பெரியார் அவர்களைப்பற்றி அபிப்பிராயம் கூறும் நேரமே எந்தப் பொறுப்புள்ள பதவி வகிப்போரும் வாய் திறக்கக் கூடாத நேரம்.

பெரியார் அவர்கள் கொலைக் குற்றப் பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு; முச்சலிகா பாண்டுமீது வெளியிலிருக்கிறார்.

அவர்மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு நாளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

—இந்த நிலையில் நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பாதிக்கும் வகையில் பதவியில் இருப்பவர்கள் எதுவும் கருத்து தெரிவிக்காமல் இருப்பதுதான் அழகு.

ஆனால் பண்டிதரோ அதை மறந்து; எங்கு பெரியார் அவர்கள் மீது விசாரணை நடந்து கொண்டிருக்கிறதோ அந்த ஊரில்; பெரியார் அவர்களது அறிக்கை குறிப்பிடுகிறபடி, "எந்த நீதிபதியும் மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்க வேண்டியவர்களோ—விசாரிக்கிறார்களோ அந்த மாஜிஸ்ட்ரேட்டையும் நீதிபதியையும் அழைப்பு அனுப்பி வரவழைத்து, எதிரில் உட்கார வைத்துக் கொண்டு, அவர்களைப் பார்த்து, இவர்கள் (இந்தக் குற்றவாளிகள்) சிறையில் இருக்க வேண்டியவர்கள் ஆவார்கள்! இவர்கள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள்! மன்னிக்கத் தக்கவர்கள் அல்ல"—என்று பேசுவதில் நேர்மையா தோன்றுகிறது?

—இதே நிலைமை வேறொரு இடத்தில் ஏற்பட்டபோது அவர் என்ன செய்திருக்கிறார்?

முதுகுளத்தூர் வகுப்புக் கலவரம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் அதில் சம்மந்தப்பட்டவர்கள் இருக்க வேண்டிய இடம் சிறைச்சாலை என்று கூறவில்லை.

" விவகாரம் நீதி மன்ற விசாரணையில் இருந்து வருகிறது. யார் குற்றவாளிகள், யார் குற்றமற்றவர்கள் என்பதை நீதிபதிகள் தீர்மானிப்பார்கள் "

—என்றுதான் அடக்கமே உருவாகப் பேசியிருக்கிறார்.

ஆனால் பண்டிதரிடம் காணப்பட்ட அந்த அடக்கம் திருச்சியிலே மறைந்து; ' அடங்காப் பிடாரித்தனம் ' குடியேறுவானேன் ?

—முதலமைச்சரின் இந்தக் குறிப்பு ஒழுங்கான நீதி பரிபாலனத்திற்கே மாபெரும் இழுக்காகும். நீதி மன்றம் உடனே இந்த இழுக்கு துடைக்கும் பணியில் ஈடுபட வேண்டுமென்றுதான் நாடு எதிர்பார்க்கிறது.

பொங்கல் மலர்

மலர் தனிப் பிரதி தேவைப்படுவோர் பதிவுத் தபால் கட்டணம் உட்பட ரூ. 2—75 அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். பதிவுத் தபால் வாயிலாக அனுப்பினால்தான் மலர் தடங்கலின்றி கிடைக்கும் என்பதற்கும் உறுதி தர இயலும்.

—நிர்வாகி

பெரியார் அழைப்பு விடுத்தால் தி. மு. கழகம் என்ன செய்யும்?

[சென்ற 10—12—57 அன்று **அறிஞர் அண்ணா** அவர்கள், சென்னை, ராயப்பேட்டையில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.]

திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணைவது விரைவில் சாத்தியமே என்று பெரியாரவர்கள் தஞ்சையில் கூறியதாகச் சில பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பது குறித்து என் கருத்தைத் தெரிவிக்கும்படி என்னிடம் ஒரு தோழர் எழுதிக் கேட்டிருக்கிறார்.

அப்படி பெரியார் அவர்கள் என்னைப் பார்த்து, 'அண்ணாதுரை, வாடா' என்று அழைப்பாரேயானால், நான் என்ன செய்வேன் என்று நீங்கள் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

நானும் மற்றத் தோழர்களும் ஏழெட்டு ஆண்டுகளாக ஆரம்பித்து நடத்திவரும் கட்சியின் எதிர்காலத்தைப்பற்றி யோசிக்காமல், அழைத்ததும் அப்படியே போய்விடுவேன் என்று நீங்கள் கருதிவிட வேண்டாம்.

நாம் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறியபோது என்னென்ன திட்டங்கள் அங்கு இருந்தனவோ, அவைகளுக்குத்தான் நாங்கள் பணிய முடியுமே தவிர, நாங்கள் வெளியேறிய பிறகு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட திட்டங்களுக்கு நாங்கள் உடன்பட மாட்டோம்.

எங்கள் உடன்பாடே இல்லாமல், எங்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகளை அவர்கள் இன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் அன்று கண்ட பெரியாருக்கும் இன்றைய பெரியாருக்கும் பெருத்த வித்யாசமிருக்கின்றது; அவரது ஆற்றலில்—அறிவில்—உழைப்பில் குறைந்திருப்பதாகச் சொல்லவில்லை. அவரது சுற்றுச் சார்பில் இன்றைய தினம் பெரிய வித்தியாசமிருக்கிறது. நாங்கள் அன்று கண்ட பெரியார், அவசரப்பட்டு எந்த நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டார். தனி நபர்களிடத்தில் பகைமையுணர்ச்சி காட்டமாட்டார்.

தொண்டைமண்டலம் பள்ளியில் இந்தி எதிர்ப்பு நடந்து கொண்டிருந்த நேரத்தில், பிராமண சமுதாயத்துக்கு ஒரு வேண்டுகோள் கொடுத்தார் பெரியார். மீண்டும் 'அந்த நாளும் வந்திடாதோ' என்று பாடத் தெரிந்தவர்கள் பாடுங்கள்.

திராவிடநாடு கிடைத்தால் தங்கள் கதி என்ன ஆகுமோ என்று பார்ப்பனத் தோழர்கள் பயப்பட வேண்டாம்; திராவிட நாட்டில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடு இருக்காது. கட்டை வண்டி இழுக்கவும், குப்பை கூட்டவும், மலம் எடுக்கவும் பார்ப்பனர்களைப் பயன்படுத்துவோம் என்ற பயம் வேண்டாம்; நாகரீகம் வளர வளர அந்த வேலைகளையெல்லாம் இயந்திரமே செய்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும்' — என்று அந்த வேண்டுகோளில் பெரியார் குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் பெரியாரை நான் இன்னமும் வழிபட்டுக் கொண்டு தானிருக்கிறேன்; அவர் வழிதான் நடந்து கொண்டிருக்கிறேன். அது மட்டுமல்ல; அந்த நாளைய குருசாமியையும் தோழமை கொள்ள விரும்புகிறேன். அப்பொழுதெல்லாம் தோழர் குருசாமி, 'விடுதலை' பத்திரிகையில், பூணூலை அறுத்துவிட்டுக் கழகத்தில் சேர்ந்த பார்ப்பனத் தோழர்களைப் பாராட்டி எழுதுவார்; அறுக்கப்பட்ட பூணூல் 6, 7 என்று எண் கொடுத்து எழுதுவார்.

நாம் திராவிடக் கழகத்தை விட்டு வெளியே வந்த பிறகு, அவர்கள் எடுத்த முடிவுகளுக்கெல்லாம், நாமும் உடன்பாடு கொண்டவர்கள்தான் என்று கருதுவது தவறு.

நான் ஒன்று சொல்லிக்கொள்வேன்; இந்த விஷயத்தில் பெரியாருக்கு ஆழ்ந்த பற்று உண்டு. இந்தியத் துணைக் கண்டத்திலேயே பெரியாருக்கு நிகராக உழைக்கக்கூடிய ஒரு பெருந்தலைவர் வேறு எவருமே இல்லை. மற்றபடி எதிலே எனக்கும் அவருக்கும் மாறுபாடு என்றால், பெரியாரவர்கள், தன்னால் மட்டுமே இந்தக் காரியத்தைச் சாதித்து முடிக்க முடியும்; தன் காலத்திலேயே இதைச் செய்து முடிக்கப்பட வேண்டும்; தனக்குப் பிறகு இதைச் செய்ய யாருமில்லை என்று ஐயப்பட்டு, தனக்குப் பிறகு எல்லாம் நாசமாகிவிடும் — என்பதை உளமார நம்பிக் கொண்டிருப்பவர்.

முதல் தோசை சுடுவதற்குத்தான் 5 நிமிடம் பிடிக்கும்; முதல் தோசையை சுட்டு விட்டால், பிறகு இரண்டாவது தோசை சுட 3 நிமிடம் போதும்; அதன் பிறகு ஒவ்வொரு தோசைக்கும் இரண்டொரு நிமிடங்கள் போதும். வீட்டிலுள்ள தாய்மார்களுக்கு இந்த சூட்சமும் புரியும்.

அதேபோலத்தான், நாட்டில் புரட்சி ஏற்படுவதற்கும் முதல் கட்டம் கொஞ்சம் நாளாகும். அதன் பிறகு, எல்லாம் குறைந்த காலத்திலேயே அடுத்தடுத்து, மிகச் சுலபமாக நடைபெற்று விடும்.

லெனின் உண்டாக்கிய புரட்சிக்குப் பிறகு, ஸ்டாலின் மிகக் குறைந்த காலத்திலேயே புரட்சிகளை நடத்திக் காட்டினார். லெனினையும், ஸ்டாலினையும் விட ஆற்றலும் திறமையும் குறைந்தவரானாலும், குருஷேவால், ஸ்டாலினுக்குப் பிறகும் நாட்டை நடத்திச் செல்ல முடிகிறது.

இயந்திரம் அமைக்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு அதை இயக்க நொண்டியாக இருந்தாலும், அவனால் முடியும். இயந்திரத்தை அமைக்க வேண்டிய பொறுப்பு பெரியாருடையது. இயந்திர அமைப்புக்கான திறமையை வேறு காரியங்களில் காட்டுகிறார் பெரியார்.

நம்முடைய இயக்கம் — திராவிடர் கழகத்தையும் சேர்த்துத்தான் நம்முடைய இயக்கம் என்று சொல்லுகிறேன் — காரியங்களை ஒத்திப் போட்டுக் கொண்டே செல்லக் காரணம் என்ன? நமது இலட்சியம் நிறைவேற இவ்வளவு கால தாமதம் ஆவதற்குக் காரணமென்ன?

உண்மையில் பெரியாரவர்களைப்போல் வேறு யாரும் பொது மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள் — நித்தம் நித்தம் பல்லாயிரக் கணக்கான மக்களைச் சந்திக்கிறவர்கள் இடையாது. பெரியாரைப்போல் வேறு எந்தத் தலைவரும் தன் ஆற்றலைக் காட்டவில்லை. அப்படியிருந்தும் பலன்? 3,000 பேர் சிறை சென்றார்கள்! 30 ஆண்டு உழைத்தபின் பலன் இதுவாகத்தானா இருக்க வேண்டும்?

கோழி வளர்ப்பவனுக்கு கோழி முட்டையிட்டால்தானே பலன் உண்டு-என்று பொருள்? கோழி முட்டையிடாவிட்டால் கோழியை வளர்த்து அவனுக்குப் பயன் என்ன? கோழியைப் போல இயக்கத்தை வளர்த்து என்ன பலன்?

'மூவாயிரம் பேர் சிறை சென்றிருக்கிறார்கள்' என்று பெரியார் சொன்னால், 'நாங்கள் ஐயாயிரம் பேர் சென்றிருக்கிறோம்' என்று சொல்கிறார் நம் ஆசைத்தம்பி. காங்கிரஸ்காரர்களைக் கேட்டால், 'நாங்கள் 60 ஆயிரம் பேர் சிறை சென்றிருக்கிறோம்' என்பார்கள்; கம்யூனிஸ்டுகளைக் கேட்டால், 'எங்களுக்கு எத்தனை பேர் போனார்கள் என்ற கணக்கே தெரியாது' என்பார்கள்.

பெரியாரவர்கள் யாரையும் விட இந்த விஷயத்தில் ஒரு துளியும் குறைந்தவரல்ல; ஆனால் பெரியாரவர்களின் ஆற்றலுக்கேற்ற முழுப் பலன் கிடைக்கவில்லை. கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்ன?

ஏசுநாதருக்கு — அவருக்குப் பின்னால் அவரது கொள்கைகளைப் பரப்ப 10—12 சீடர்கள் இருந்தார்கள்; முகம்மது நபிக்கும் 2-3 சீடர்கள் இருந்தார்கள்; லெனினுக்கு ஸ்டாலின் இருந்தார்; சன் யாட் சென்னுக்குப் பிறகு சியாங் கே ஷேக் இருந்தார்; மா சே துங்கும் அவரால் காப்பாற்றப்பட்டதாகச் சரித்திரம் சொல்லுகிறது.

பெரியாருக்கு யார் சீடர்? யாராவது இருந்தால், இருக்கின்ற சீடரும் மாதா மாதம் மாறக் காரணம் என்ன? அண்ணாதுரையைத் தள்ளி விடுங்கள்—அண்ணாதுரை மட்டும்தானா சீடன்? ஜீவானந்தம் சீடனாக இருக்கவில்லையா? எஸ். இராமநாதனும், சாமி சிதம்பரனாரும், சௌந்தரபாண்டியனும் சீடராக இருக்கவில்லையா? ஏன் —காமராசர்கூட, ஒரு காலத்தில் பெரியாரின் சீடராக இருந்ததாக, பெரியாரும் — காமராசரும் சந்தித்து அளவளாவுகிற நேரத்தில் காமராசரே சொல்லுவதாகக் கூறப்படுகிறது.

இதை, ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்; சிதைந்து சிதைந்து வளரும் வளர்ச்சி என்று.

திராவிட இயக்கம் மேலே முன்னேறிச் செல்லும்போது, பின்னாலும் இழுக்கப்படுகிறது. இதனால் நம ஆற்றல் சிதைகிறது; அதனால்தான் ஆணவக்காரர்கள் நம்மைப் பார்த்து, 'காட்டு மிராண்டி' என்று கூறுகிற அளவுக்கு இடமளிக்கிறது.

திராவிட நாட்டுப் பிரிவினையை அடைய நாம் நமது சக்தியை—வலுவை நேருவிற்குக் காட்டியாக வேண்டும். இதற்கு "வேட்டு' முறை கூடாது; 'வோட்டு' முறையே நல்லது. எனவேதான் சட்டசபைக்குள் தி. மு. கழகம் நுழைந்தது. திராவிடர் கழகமும் அடுத்த பொதுத் தேர்தலில் கலந்து போட்டியிட வேண்டும். இவ்விதம் ஜனநாயகப் பாதையில் அடியெடுத்து வைக்க பெரியார் முன் வரவேண்டும்.

எமது புதிய வெளியீடுகள்!

மு. கருணாநிதி தீட்டிய
கண்ணடக்கம்
விலை ரூ. 1—00

கே. ஜி. இராதாமணாளன் தீட்டிய
எழிலரசி **கிளியோபாட்ரா**
விலை ரூ. 1—50

பசி
விலை ரூ. 1—00

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் திருச்சி—2.

இது வரை...

- வரலாற்றுப் புகழ் பெற்ற 1024—ம் ஆண்டு...
- இந்து மதத்தின் இதயமும், சனாதனக் கோட்டையுமான சோமநாதபுரத்து ஆலயத்தைத் தகர்த்தெறிய பாசறை அமைத்திருக்கும் கஜினி, ஒரு நாள் இந்துப் பெண் புவனாவின் குழந்தையை ஓநாயின் வாயிலிருந்து மீட்கிறான்; ஆனால் உள்ளத்தை புவனாவிடம் பறிகொடுத்து விடுகிறான்...

க்ஷயம் பீடித்திருந்த புவனாவின் கணவனுக்காக ஆண்டவனை வேண்ட சோமேசர் ஆலயத்துக்குச் சென்ற புவனாவின் கற்பை, கடவுளின் பெயரால் காணிக்கை கேட்கிறான், தலைமைப் புரோகிதன். அந்த மிருகத்தினிடமிருந்து அவளைக் காப்பாற்றுகிறார், நிர்மலானந்தர் தன் பெயர்; மதுராபுரி தன் ஊர் — என்று சொல்லிக் கொள்ளும் ஒரு புதிய சாது! பின், அவர் திலோத்தமா என்ற தேவதாசியைச் சந்திக்கிறார். முற்றும் துறந்திருக்க வேண்டிய அந்த இந்து சாதுவிடம் தன் அன்பைச் சொரிகிறாள் திலோத்தமா...

புவனாவின் கணவன் இறந்து விடவே, அவனுடன் உடன்கட்டை ஏறுகிறாள் புவனா. ஆனால் சிதையிலே உள்ள இரகசிய வழி மூலம் மீட்டு, அவளைத் தன் தனி அறையில் சிறை வைக்கிறான், தலைமைப் புரோகிதன்...

இதற்கிடையில், கஜினி சோமேசரின் ஆலயத்தைத் தூளாக்கும் பணியிலே ஈடுபட்டு விட்டான் என்ற செய்தி கிடைத்ததும், திலோத்தமாவை புவனாவுக்குக் காவலாக வைத்து ஓடுகிறான். திலோத்தமாவின் பெண்மையோ புவனாவைத் தப்புவிக்கிறது. ஆனால் புரோகிதனின் கழுகுக் கண்களிலிருந்து புவனா தப்பிவிட முடியவில்லை...

புவனாவின் கற்பைச் சூறையாட முயலும்போது, தலைமைப் புரோகிதனைக் கைது செய்த கஜினி, அவனைத் தூக்கிட்டுத் தொங்கவிடும்படிக் கட்டளையிடுகிறான். அப்போது திடீரென்று அங்கு வந்த திலோத்தமா, 'புவனாவின் கற்புக்குக் களங்கம் விளைவிப்பானோ கஜினி' என்று எண்ணி, கட்டாரியை அவன்மேல் வீசுகிறாள். கஜினியின் இரும்புக் கவசம் அவனைக் காப்பாற்றுகிறது. கைது செய்யப்படும் திலோத்தமாவிடம் 'சாகுமுன் ஆசை என்ன?' என்று கேட்கிறான் கஜினி. தான் ஒரே ஒரு நாள் மட்டுமே சந்தித்த— ஆனால், தன் இதயத்தில் நல்லிடம் பெற்று விட்ட சாது நிர்மலானந்தரை எப்போதாவது சந்தித்தால் அவருக்கு எந்தத் தீங்கும் இழைக்கக் கூடாது—என்று வேண்டுகிறாள் அவள்......

- கஜினி புவனாவின் துவண்டு போன உடலைத் தூக்கிக் கொண்டு புறப்படுகிறான்... ஆலயத்தின் மத்தியிலே தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறான், துரோகத்தின் உருவம்—தலைமைப் புரோகிதன்......
- காவலில் இருக்கும் திலோத்தமாவிடம் வந்த நிர்மலானந்த சாது, திலோத்தமா கஜினியை மணக்க தான் தூது வந்ததாகத் தெரிவிக்கிறார். வெகுண்டெழுந்த திலோத்தமா 'இந்துப் பெண் எவளும் கஜினியை மணக்க சம்மதியாள்' என்று சொல்லி அனுப்பி விடுகிறாள். நிர்மலானந்தரிடம் திலோத்தமா கொண்டிருந்த அன்பும் பிளவு படுகிறது...
- இனி, மேலே படியுங்கள்...

15

திலோத்தமா சூரியன் உதிக்கும் முன்பே விழித்துக் கொண்டாள். கண்ணிமைகள் கனமாகத் தோன்றின; நெஞ்சு பாரமாகத் தோன்றியது. திடீரென்று பக்கத்தில் குழந்தை அழும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து பார்த்தாள். என்ன ஆச்சரியமிது! யார் இந்தக் குழந்தை? எப்படி அங்கே வந்தது? திலோத்தமா திகைப்பில் மூழ்கினாள். குழந்தையோ பலமாக மேலும் மேலும் வீறிட்டு அழத் தொடங்கியது. சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் குழந்தைக்கு உரியவர்கள் அக்கம் பக்கம் இருக்கிறார்களா என்று தேடினாள்; ஒருவருமில்லை. குழந்தையின் அழுகையைப் பொறுக்க முடியாதவளாய் அன்போடு அதை எடுத்து மார்பில் அணைத்துக் கொண்டாள். குழந்தையோ வாய் பிளந்து பால் குடிக்கப் பிரயத்தனம் செய்ய ஆரம்பித்தது. திலோத்தமாவின் நிலை தர்ம சங்கடமாகப் போய் விட்டது. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் குழந்தை படுத்திருந்த இடத்தருகில் ஒரு கடிதம் சுற்றி வைத்திருப்பதைக் கண்டாள். வேகமாகப் போய்க் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்:

"அன்புள்ள திலோத்தமா,

உன்னை அப்படி உரிமையுடன் பெயர் சொல்லி அழைப்பதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாயோ, எனக்குத் தெரியாது. நான் அப்படி உன்னை அழைப்பது வாஞ்சையூறிடும் சகோதரப் பாசத்தோடுதான்!

கஜினியில் வசித்த என்னிடம் எத்தனையோ யாத்ரீகர்கள் வந்து இநதுஸ்தானத்தின் எழில் குலுங்கும் சோலைகள் பற்றியும், வறண்ட பூமியை வளங்கொழிக்கச் செய்யும் வற்றாத நதிகள் பற்றியும் நிறையச் சொல்லி இருககிறார்கள். கல்லெல்லாம் கலையாகவும், எண்ணமெல்லாம் இலக்கியமாகவும் வடித்திடும் எண்ணற்ற மேதைகள் இருப்பது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். கண்ணால் கண்டதைக் கண்டபடியே சித்தரிக்கும் கைதேர்ந்த அந்த யாத்ரீகர்கள்கூட, இந்துஸ்தானம் அழகிகள் நிரம்பிய பூமியென்று சொன்னார்களே தவிர, அந்த அழகிகள் அன்புக்காகத் தியாகத்தின் எல்லையையே எட்டிப் பிடிககும் ஆற்றல் படைத்தவர்கள் என்று சொல்லவே இல்லை! என் படையெடுப்பில் அவர்கள் சொல்ல மறந்த, சொல்லத் தவறிய, அந்த உண்மையைத்தான் அறிந்து கொண்டேன்.

வெற்றி வீரனாக, லட்சியம் நிறைவேறிவிட்ட திருப்தியுடன் நான் கஜினி நோக்கிப் புறப்படு

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

வதாகத்தான் இந்துஸ்தானத்து மக்கள் எண்ணுவார்கள். கஜினி நகரத்தில் என் வருகைக்காகக் காத்திருக்கும் பலரும் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். உண்மையும் அதுதான். அதோ, என் கண் முன்னால் யானைகளும், குதிரைகளும், கோவேறுக் கழுதைகளும் இந்துஸ்தானம் பூட்டி வைத்திருந்த செல்வத்தை எல்லாம் மூட்டை மூட்டையாக ஏற்றிக் கொண்டு கஜினி நோக்கிக் கம்பீர நடை போடத் தொடங்கி விட்டன. மதுராபுரியின் சிலையும் சோமநாதபுரத்து லிங்கமும் தூளாக்கப்பட்டு, கஜினியில் கட்டப்படவிருக்கும் மசூதிக்குப் படியாக அமையப் போய்க் கொண்டிருக்கின்றன. கனவு நினைவாகி, நினைவும் செயலாகி விட்ட நேரம்............ லட்சியம் கை கூடி விட்ட சமயம்......களிப்புக் கடலில் மூழ்சித் திளைக்க வேண்டிய உள்ளம், கவலையிருளில் சிக்கித் தவிக்கிறது என்றால் நம்புவார் யார்? தேற்றுவார் யார்?

திலோத்தமா, சோமநாதபுரம் என் வாழ்க்கையில் பல விஷயங்களில் லட்சிய பூமியாகி விட்டது. பெண்மைக்கு இலக்கணமாய் அமைந்த இரு பெண்களை முதன்முதலாய் என் வாழ்க்கையில் சோமநாதபுரத்தில் தான் கண்டேன். புவனாவின் குழந்தையை ஓநாயின் வாயிலிருந்து காப்பாற்றி அவளுக்கு அறிமுகமானேன். அப்பொழுது நான்தான் கஜினி முகம்மது என்பது அவளுக்குத் தெரியாது. அது நான் சோமநாதபுரத்தை முற்றுகையிட்டிருந்த சமயம். இஸ்லாமியன் ஒருவன் இந்துக் குழந்தையைக் காப்பாற்றியது பாபமென்று கருதியோ, என்னவோ, பொங்கி வரும் நன்றியுணர்வையும் அடக்கிக் கொண்டு, புவனா தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கண்ணில் படாமல் ஓடி விட்டாள்.

கண்களிலிருந்து மறைந்த புவனா என்னுடைய கருத்திலிருந்தும் அப்பொழுதே மறைந்திருந்தால் நான் எவ்வளவோ நிம்மதியாக இப்பொழுது திரும்பிப் போவேன். ஆனால் புவனாவின் அழகு என் இதயத்தில் நிலைத்து விட்டது. நான் அவளை மறப்பதற்குச் செய்த முயற்சிகள் மீண்டும் மீண்டும் அவளை என் நினைவுக்குக் கொண்டு வரவே பயன்பட்டன. வேதனை தாளமுடியாத நிலையில், புவனாவைக் காணவும், சோமநாதபுரம் பற்றித் துப்புகள் அறியவும் நிர்மலானந்த சாதுவாக உருவெடுத்தேன். இந்தச் செய்தி உனக்கு எவ்வளவு அதிர்ச்சியைத் தரும் என்பதும், இந்து சாதுவாக வந்து உன் இதயத்தைத் திருட்டுத் தனமாகக் கவர்ந்துவிட்ட என்னை மன்னிக்க மாட்டாய் என்பதும் எனக்குத் தெரியும். சோமநாதபுரத்துக்குள் நிர்மலானந்த சாதுவாக நுழைந்த நான் கற்பழிக்க முயன்ற புரோகிதனின் பொல்லாக் கொடுமையிலிருந்து குழந்தையை மீட்டதும், நிர்மலானந்தராக வந்து புரோகிதனிடமிருந்து காப்பாற்றியதும் கஜினி முகம்மதுதான் என்ற உண்மை, கடைசிவரையில் புவனாவுக்குத் தெரியாமலே போய்விட்டது.

புவனாவைப் புரோகிதனிடமிருந்து காப்பாற்றிய பின், உன்னைச் சந்தித்தேன். மாசு மருவற்ற உன் அழகும், அதற்கு மெருகேற்றி நிற்கும் உன் கலைத் திறனும், அந்த இரண்டிற்கும் பின்னணியாகி நிற்கும் உன் சோக வரலாறும் இனந் தெரியாத ஒரு உணர்ச்சியை உன்பால் என்னைக் கொள்ளச் செய்தது. அது வெறும் இரக்க உணர்ச்சியல்ல என்பதை உன்னை விட்டுப் பிரிந்தபின் தான் உணர்ந்தேன். ஏதோ ஒரு சக்தி என்னை உன்னிடமும் புவனாவிடமும் இழுப்பதை உணர்ந்தேன். அதற்குப் பிறகு நடந்தது உனக்கு நன்றாகத் தெரியும்!

திலோத்தமா, உன் அன்புச் சகோதரி புவனா என்னை மட்டு

[தொடர்ச்சி பக்கம்—8]

பயணம்....

[முதற் பக்கத் தொடர்ச்சி]

முதலியோர் உள்ளிட்ட நல்லறிவாளர்கள் ஒன்று கூடித் தோற்றுவித்தனர் என்று கடிதம் எழுதிய நண்பர் குறிப்பிடுகிறார். அவர்களே அப்பெயரைக் கண்டனர் என்பதிலும், 1890-ல் ஆரம்பித்து 1892-ல் ஆட்சியாளரின் அங்கீகாரத்தை 1860-ம் ஆண்டு சட்டத்தின்படிப் பெற்றனர் என்பதிலும் நமக்கு மறுப்பில்லை. மகிழ்ச்சியே! தோழர் கூற வருவது; நீங்கள் அந்தப் பெயர் காணவில்லை; நாங்களே தான் கண்டோம் அப்பெயரை என்பதைவலியுறுத்தவேதான்! அவரே எழுதுகிறார்;

"இதன் நோக்கம் அப்பெயரை சுமார் எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னமே நாங்கள் கண்டவர்கள் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான்"

வாசகத்தைக் கவனித்தாயா பொன்முடி! எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் நாங்கள் கண்டவர்கள் என்கிறார்! ஓலை எழுதிய நண்பர் கிழவராயிருப்பின் பெயர் கண்ட காலத்தில் அவர் குழந்தையாய் இருந்திருக்க வேண்டும். இளைஞராயின் அப்போது அவர் பிறந்திருக்கவேமாட்டார்.

ஆகவே "நாங்கள்" என்ற வார்த்தையை பரந்த நோக்கத்தோடும் கம்பீரத்தோடும் தன் இனம் என்ற பெருமிதத்தோடும்தான் குறிப்பிடுகிறார் என்று நாம் கருதவேண்டியிருக்கிறது. அந்த நாங்களில்-இவர் குழந்தையாகவோ, "அல்லது பிறக்காமலோ இருந்த காலத்தில் "ஆதி திராவிடர்" என்ற பெயர் சூட்டக் காரணமாயிருந்த அந்த நாங்களில் — இவரைப் போலவே அப்போது இருந்த நம்மையும் சேர்த்துக் கொள்ள தோழர் ஏன் தயங்க வேண்டும்?

'நான் கூட்டத்தில் மறுப்பு கூறியது காங்கிரஸ்காரருக்கு! கக்கன் அவர்களுக்கு! ஆதி திராவிட மகாஜன சபைக்கு அல்லவே!...பிறகேன் தோழர் நம்மீதும் கழகத்தின் மீதும் தாக்குதலை நடத்த வேண்டும்?

இந்தக் கேள்வி என் உள்ளத்தைக் குடைகிறது-பதில் கிடைக்கவில்லை.

தோழரின் மடலில் காணப்படும் பல வாசகங்கள் மந்திரி கக்கன் அவர்களுக்குப் பதிலாகப் போய்ச் சேரவேண்டியிருக்க, அவைகள் நமக்கு விளக்க முரைக்கும் நிலையிலே எழுதப்பட்டிருப்பது காண மிக மிக வியப்படைகின்றேன், நண்பா!

"உயர்திரு இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் "பறையன்" என்ற பத்திரிகையையும், திரு. டி. ஜான் ரத்தினம் அவர்கள் "திராவிட பாண்டியன்" என்ற பத்திரிகையையும்நடத்தி ஆதி திராவிட முன்னேற்றம் கருதி, சாதி பேதத் தவறுகளையும் எடுத்தோதி வந்தனர்,"

—என்று நண்பர் குறிப்பிடுகிறார். "நாங்களதான் அரிசனங்களுக்கு வழிகாட்டி" என்று முரசு கொட்டிக் கொண்டிருக்கிற கக்கன்ஜீ அவர்களிடமல்லவா இந்த ஆதாரங்களை அவிழ்த்துக் கொட்ட வேண்டும்—அதை விட்டு நம்மைக் கொட்டிப் பயன் என்ன?

அன்றொரு நாள்—ஆண்டுகள் பல ஓடி விட்டன; நீடாமங்கலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடொன்றில் சமபந்தி போஜனத்தில் உட்கார்ந்து விட்ட காரணத்திற்காக ஆதி திராவிட மக்கள் மொட்டை அடிக்கப்பட்டு காங்கிரஸ் புண்ய மூர்த்திகளால் அவமானப்படுத்தப்பட்ட கொடுமையை திராவிடர் இயக்கம் நாடெங்கும் பறைசாற்றி, காங்கிரசின் சமத்துவ நோக்கத்தைச் சந்தி சிரிக்க வைத்தது. அந்தக் காங்கிரஸ் குடையின் நிழலிலே குஞ்சரம் ஊர்ந்து கொண்டிருக்கும் அமைச்சர் கக்கன் கூறுகிறார்; அரிசனங்கள் வீட்டிலே வெள்ளிப் பாத்திரம் இருப்பதற்குக் காங்கிரசே காரணம்—என்று!

கடிதம் எழுதிய நண்பருக்குக் கக்கன்மீது பாய்ச்சல் நடத்த துணிவு ஏற்படவில்லை. "ஏழை ஆதி திராவிடரின் வீட்டிலே கிடக்கும் புதிய தகரக் குவளைகள் உமக்கு வெள்ளிப் பாத்திரமாகத் தெரிகிறதோ?" என்று கேட்கும் ஆற்றலை நண்பர் பெற்றிட முடியவில்லை. குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகளை வளர விட்டு விட்டு, கொல்லையிலே நுழையும் மாட்டு மந்தைகளுக்கு இடமளித்து விட்டு, பாதுகாப்பு வேலியாகப் பணிபுரியும் நம்மையும் அழித்து ஒழித்து விடுகிறேன் எனக் கிளம்பும் ஒரு சில அவசரக்காரர்களுக்கு அத்யந்த நண்பராகிறாரே தோழர் என்பதற்காக நெஞ்சு நெகிழ்கிறேன். என் செய்வது பொன்முடி; நமது பயணத்திலே இப்படியெல்லாம் பலரை சந்திக்க வேண்டியிருக்கிறது! இந்த எதிர்ப்புகளை நான் பாறை—பருக்கைக்கல்—என்ற அளவில் ஒப்பிடமாட்டேன். பலாக்கனி தலையில் முட்டும்போது ஏற்படும் இன்பத் தொல்லைதான் ஏற்படுவதாகக் கருதி மகிழ்ச்சியடைய வேண்டும் நானும், நீயும், நமது கழகத்தாரும்!

இதோ பார் இன்னொரு எதிர்ப்பு......எதிர்ப்பு என்று கூடச் சொல்லமாட்டேன்; அந்த எடையில் நிற்காதது தான்; ஆனாலும் வேதனையை வேடிக்கையாகக் குறிப்பிடுவதால்கூட மாற்றிக் கொள்ளவோ, மறந்து விடவோ முடிகிறதல்லவா?...

ஆச்சாரியாரின் பிறந்த நாளுக்காக கல்கி சிறப்பிதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது. 'யார் யரோ உயர்ந்தோர், உத்தமர், அறிஞர் பெருமக்கள், ஆச்சாரியாரைப் பற்றிய சிறப்புகளை எழுதியிருக்கிறார்கள்; அதோடு அம்மையார் நீலாவதி ராமசுப்பிரமணியமும் 'ஞான முனிவர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார்.

அதில்......

"பரபரப்பான பேச்சையோ, திகைக்க வைக்கும் அடுக்குச் சொற்களையோ (ஆச்சாரியாரிடத்தில்) அவரிடத்தில் காண முடியாது."

பார்த்தாயா; யாரைப்பற்றி எழுதும்போது யார் மீது பார்வை படுகிறது என்று! தொலையட்டும்; நம்மைக் கேலி செய்து விட்டு, அவர்கள் வேறு வழியிலே போனார்களா என்று பார்த்தால் அதுவுமில்லை. நம் வழியிலேயே நடக்க முயற்சித்து, தடுக்கி விழுந்திருக்கிறார்கள் பல இடங்களில்; அதே கட்டுரையில்!

அடுக்குச் சொல் பிடிக்காதவர்களின் வாசகத்தைக் கவனி:

"சேலம் தந்த தீங்கனி நம் ராஜாஜி! தீர்க்கதரிசி! அறிவின் ஆழ் கடல்! கற்பனைக் களஞ்சியம்! இலக்கிய ஊற்று! உவமைக்கு ஒரு ராஜாஜிதான் உண்டு! குற்றால முனியின் வற்றாத அன்புத் தடாகத்திலே வளம் பெற்ற மலர் ராஜாஜி!"

—(கல்கி)

நம்மிடமே கற்று, கற்றதைக் குறைவறக் கற்காத காரணத்தால் தீட்டிய மரத்திலே கூர் பார்க்கும் பண்பினையும் பெற்று, போகிற போக்கில் நம்மைப் பார்த்தும் சிறிது உறுமிவிட்டுப் போகிறவர்கள் நிறைந்து விட்ட உலகமடா நண்பா இது! பொல்லாத உலகம்!

இந்த உலகத்திலேதான் நாமும் தன்னந்தனியே கொள்கையொன்றின் துணை மட்டுமே போதுமெனத் துணிந்து பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எதிர்ப்பு, கக்கன் உருவிலே வருகிறது — கடிதம் எழுதிய தோழரின் உருவிலே வருகிறது—கட்டுரையாளரின் வாசகத்தைக் காட்டினேனே; அப்படி வருகிறது — இன்னும் கன்தனவான்கள் உருவிலே — கத்தி, கேடய உருவிலே — காருண்ய சர்க்காரின் துப்பாக்கி உருவிலே —காட்டுமிராண்டி கீதப் புகழ் நேரு பிரானின் உருவிலே—இப்படிப் பல முனைகளிலேயிருந்து பல வகைகளிலே எதிர்ப்பு கிளம்புகிறது.

நேரு ஒருவரின் எதிர்ப்பிலே யாவது நேர்மை சிறிது இருக்குமெனப் பல காலத்திற்குமுன் எதிர்பார்த்தோம். ஏனெனில் "உலகவரலாறு" தீட்டிய "உத்தம"ராயிற்றே என்பதால்! இப்போது அவரும் அண்ணா கூறியதுபோல கக்கன் நடைக்குக் கீழே இறங்கி வந்துவிட்டார். இந்த எதிர்ப்புகளுக்கிடையிலே நமக்கு சோர்வு ஏற்பட்டு விட்டதா? அலுப்போ, ஆதங்கமோ மேலிட்டுவிட்டதா? இல்லை நண்பா, இல்லை. மாறாகப் புதிய எழுச்சி பெற்று வளர்ந்து வருகிறோம். அதற்குரிய பல எடுத்துக் காட்டுகளில் ஒன்றுதான் நானும், மதுரை முத்தும், பண்ணை முத்தும், துறையூர் அழகமுத்தும், திருச்சி பராங்குசமும் ஒரு சேரச் சென்ற வெற்றிகரமான சுற்றுப் பயண நிகழ்ச்சிகளாகும். மதுரை மாவட்டத்தில் மேலூர் என்னும் பேரூர்—அங்கே கூட்டம் — ஊர்வலம் —கொடியேற்று விழா! கக்கனுடைய ஊர் அது! அவர் வெற்றிபெற்ற தொகுதி — மன்னிக்கவும்; அவரல்ல; காங்கிரசின் பணபலம் வெற்றிபெற்ற வட்டாரம் — அந்த ஊரில் மாபெரும் சிறப்பான கழக நிகழ்ச்சி! மேலூர் மட்டுந்தானே; பிற இடமெல்லாம் உமக்கேது செல்வாக்கு என்பார் கக்கன்ஜி!......மேலூரைச் சுற்றியுள்ள கழகங்களின் பட்டியலைப் பார்! மேடையில் மாலையிட்ட கழகங்களின் பெயர்கள் மட்டுமே இவை—நினைவில் நின்ற அளவுக்குத் தரககூடிய எண்ணிக்கை.

கணியமங்கலம் கிளை
அட்டப்பட்டி கிளை
மாங்குளம் கிளை
தெ. தெரு. கிளை
கொ. குடி. கிளை
" கலைவாணர் மன்றம்
கீழப் பூங்குடி கிளை
பூதமங்கலம் கிளை
நாவுனிப்பட்டி கிளை
கல்லம்பட்டி கிளை
திருவாதூர் கிளை
சத்தரப்பட்டி கிளை
கீழவளைவு கிளை
மேலவளைவு கிளை
அரிச்சிமலம் பட்டி கிளை
பிரான்மலை கிளை
சூரக்குண்டு கிளை
வள்ளாடிபட்டி அன்புநிலையம்
உச்சரிச்சான்பட்டி தி. மு. க.
புலிமலைப்பட்டி அழகிரி மன்றம்

இப்படிப் பேரூர்களைச் சுற்றிக் கொடியெனப் படர்ந்து வருகிறது தி. மு. கழகத்தின் கிளைகள். நமது கொடிக் கம்பமெனவே கொள்கையாலும் செயலாலும் உயர்ந்து நிற்கும் கம்பமெனும் ஊர்தனிலே நாங்கள் கண்ட காட்சிதனை—கழகத்தின் மாட்சிதனை விளக்குதற்கு ஏடு இடந்தருமோ? தராது என்கிறது "பிறைவானம்" — நமது சொணத்தைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறேன். அதனால் அடுத்த மடலிலும் "பயணம்" தொடருகிறேன்.

அன்புள்ள,

நண்பன்

அடுத்த இதழில்

ஆரம்பமாகிறது!

மு. கருணாநிதி

எழுதும் தொடர்கதை!

“ராஜரத்னா”-பட்டம் தருவீர்!

நாயனக் கலைஞர் கழகத்திற்கு மு. கருணாநிதி வேண்டுகோள்!

“இசைப் பெருந் திரு ராஜரத்தினம் அவர்கள் நமைப் பிரிந்து ஓராண்டு முடிகிறது. அவரது குடும்பத்தாருக்கு உதவிட நாமெல்லாம் எடுத்துக் கொண்ட முயற்சி எந்த அளவுக்கு வெற்றிபெற முடிந்தது என்பதைக் கூறாமலிருக்கமுடியவில்லை.

தமிழகத்தின் வேதனைக்குரிய தனிச் சிறப்பே, மேதைகள் பலரை இருக்கும்போதே பாராட்டிப் பராமரிப்பதை விடுத்து, அவர்கள் இறந்தபிறகு கண்ணீர் மல்கி மணி மண்டபம் கட்டுகின்ற நிலைமையில்தான் இருக்கிறது. என்னையும் சேர்த்தே சொல்கிறேன்; இந்த நிலைமைக்குத் தமிழர்களாகிய நாமனைவரும் வெட்கித் தலை குனிந்தே தீரவேண்டும்.

ராஜரத்தினம் நினைவு விழா கொண்டாடப்படும் குறிக்கோள்; அவர் வளர்த்த கலைக்கு வலுவளிப்பதற்காகவே என்பதை அனைவரும் உணர வேண்டும்.

அவரும், அவரது பரம்பரையும், வளர்த்த—வளர்த்து வருகிற நாயனக் கலை சாதாரணமானதல்ல!

தென்னாட்டிலே சிற்பிகள் உண்டு—அவர்கள் எந்நாட்டிலும் உண்டு! தென்னாட்டிலே ஓவியர்கள் உண்டு—அவர்கள் எந்நாட்டிலும் உண்டு! தென்னாட்டிலே நடிப்புக் கலைஞர்கள் உண்டு— அவர்கள் எந்நாட்டிலும் உண்டு! தென்னாட்டிலே நாயனக் கலைஞர்கள் உண்டு— அவர்கள் வேறு எந்த நாட்டிலுமில்லை!

அப்படிப்பட்ட உயர்ந்த கலையை வளர்த்த உத்தமர்— உயர் கலைஞர்; நம் உள்ளமெல்லாம் உருவாலும் திருவாலும் நிறைந்திருக்கும் ராஜரத்தினமாவார்கள்.

மனிதர்களில் கருங்காலிகள் உண்டு—அவர்களால் நாட்டுக்குப் பயனில்லை! மரத்திலே கருங்காலி உண்டு; அது நாயனம் செய்யப் பயன்படுகிறது. அந்தக் கருங்காலியில் அமைந்த குழலிலே கலையழகைக் காட்டிய பெருமைக்குரிய நாயனக் கலைஞர்களில் ராஜரத்தினம் முதன்மையானவர்.

“அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்” என்பர் திருக்குறளை... ராஜரத்தினத்திடமிருந்த நாயனமோ “மரத்தைத் துளைத்து ஏழிசையைப் புகட்டி குறுகத் தரித்த குழல்” ஆகும்!

அவர் நாயனத்தில் புல்லாங்குழலின் இனிமையை-புள்ளினத்தின் கீதத்தை—அருவியின் நடையை-தென்றலின் சுகத்தை —அத்தனையையும் அனுபவிக்கலாம்!

அத்துணை உயர்ந்த கலையைப் படைத்த சமுதாயம் தாழ்த்தப்பட்ட சமுதாயமாயிற்று— அதிலே ஒரு தன்மானச் சீயமாய்த் தோன்றி நின்றார் ராஜரத்தினம்! மேலோரால் வெறுக்கப்படும் சமூகத்தை மேன்மைக்குரிய சமூகமாக்கும் பணிக்குத் தானே எடுத்துக் காட்டாக ஏறு நடைபோட்ட ஏந்தல் ராஜரத்தினமாவார்கள்!

தியாக உணர்ச்சியோடின்றி, அடிமை உணர்வோடு ‘சேவகத்திற்குப் போகிறேன்’ எனக் கூறியவர்களைத் திருத்தி, ‘கச்சேரிக்குப் போகிறேன்–கலை நிகழ்ச்சிக்குப் போகிறேன்’ எனக்கூற வைத்தவர் ராஜரத்தினம்.

அவரது நினைவுநாள் கொண்டாடப்படும் இந் நாளில் நாயனக் கலைஞர்கள் சங்கத்துக்கும், அதன் தலைவர் டைரக்டர் சுப்பிரமணியம் அவர்கட்கும் ஒன்று கூறுவேன்; நாயனக் கலைக்கூடம் ஒன்றை ராஜரத்தினம் பெயரால் அமைத்து, அத்துறையில் மாணவர்களுக்குப் பயிற்சி தரும் முயற்சியினைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான உதவியினை அரசாங்கம் செய்திட, தலைமையேற்றுள்ள கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், கலை மந்திரியாகவும் மாறித் துணைபுரிய வேண்டும்.

இன்னொன்றும் கூறுவேன்; ஆண்டு தோறும் தேர்ச்சியும், நல்ல திறனும், புகழும் பெற்ற நாயன வித்வான்களுக்கு இந்தியத் துணைக் கண்ட அரசு “பாரத ரத்னா” பட்டம் கொடுப்பதுபோல “ராஜ ரத்னா” என்ற பட்டத்தை ஒவ்வொரு ஆண்டு நினைவு விழா நாளிலும் தருவதற்கான ஏற்பாட்டினை இச் சங்கம் மேற்கொள்ள வேண்டும்.

“ராஜ ரத்னா” என்ற பட்டம் பெற நாயனக் கலைஞர்கள் போட்டி போட்டுத் தங்கள் கலையை வளர்க்க வேண்டும். இதுவே நாம் அவருக்குக் காட்டும் மரியாதை என்பேன்.”

வடார்க்காடு மாவட்ட தி. மு. க.

அன்புடையீர்!

வணக்கம். வடார்க்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நாளது 22—12—57 அன்று மாலை 2 மணிக்கு, திருவண்ணாமலை, ராமநாதன் செட்டியார் ஹாலில் (காந்தி சிலைக் கருகில்) நடைபெறும். அவ்வமயம் கீழ்க் கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு வரும். அங்கத்தினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்.

1. மாநாட்டு வரவு செலவு,
2. மத்திய கழகத்திற்கு நிதி ஒதுக்குதல்,
3. இதர தீர்மானங்கள்.

அன்பன்,
முல்லை சத்தி
(செயலாளர்)

கரித்துண்டும், கையின் கரியும்!

“வாணம் ஆகாயத்திலே வர்ண ஜாலங்களைக் கொட்டும்போது அண்ணாந்து பார்த்து ஆனந்தப் படுகிற மக்கள், அது எரிந்து கீழே கரித்துண்டுகளாக சிதறி விட்ட பிறகு அதைப்பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பதில்லை. அந்தக் கரித் துண்டுகளாகவே பல கலைஞர்களின் வாழ்வு கருகி விடுகிற நிகழ்ச்சியை நாம் நாட்டில் காணுகிறோம்.

“திரையுலகக் கலைஞர்களையும் சேர்த்தே சொல்வேன்—இதற்கும் நான் கூறிய ‘வாணம்’ உதாரணம் பொருந்தும்.

“வாணத்தின் அழகை ரசிக்கிற மக்களுக்கு அந்த வாணத்தைத் தயாரிக்க முயற்சி எடுத்துக் கொண்டவனின் கையிலே ஒட்டிக் கொண்டிருக்கும் கரியும் அழுக்கும் தெரியாது தான்!”

-ராஜரத்தினம் நினைவு விழாவில் அறிஞர் அண்ணா.

இருள் அகற்றுவோம்!

“இசை என்றால் சங்கீதம் என்று மாத்திரம் பொருளல்ல; புகழ் என்றும் பொருளுண்டு. அந்தப் புகழ் மலையின் உச்சியிலே நின்று கொண்டு தான் ராசரத்தினம் பார்த்தார். ஆயிரக் கணக்கான மக்களைப் பார்த்தார். அவர் எழுப்பிய இசை நாதத்திலே கட்டுண்டு அவர்கள் ஆனந்தத்தில் திளைத்துக் கிடந்ததைப் பார்த்தார். சுற்றிச் சுற்றி பார்த்தார். ஆனால் அவர் தன்னையே ஒருமுறை சுற்றிப் பார்க்கத் தவறி விட்டார்.

“விளக்கு பலருக்கு ஒளியைத் தருகிறது; ஆனால் தனக்கு அருகாமையில் இருளைத்தான் கொண்டிருக்கிறது. அது போலவே ராசரத்தினம் பாருக்கெல்லாம் இசை ஒளி பரப்பி, தன் குடும்பத்தை இருளிலேயே வைத்திருந்து மறைந்து விட்டார்.

“அந்த இருள் அகல நாமெல்லாம் ஒரு அகல் விளக்காவது ஏற்றிவைக்க வேண்டும்!”

–ராசரத்தினம் நினைவு விழாவில் அறிஞர்

[மறைந்த நாதசுரக் கலைஞர் டி. என். ராசரத்தினம் அவர்களின் நினைவு நாள் விழா, சென்ற 12—12—57 அன்று மாலை சென்னை, ரசிக ரஞ்சனி சபாவில் சிறப்புற நடைபெற்றது.

விழாவிற்கு சென்னை மாநில நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். தென்னிந்திய நாதசுரக் கலைஞர்கள் சங்கத் தலைவர் டைரக்டர் கே. சுப்ரமணியம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, முசிறி சுப்பிரமணிய (ஐயர்), ஈ. கிருஷ்ண (ஐயர்), டி. என். சிவதாணு, சித்தூர் சுப்ரமணிய (பிள்ளை), செம்பனார்கோயில் ராசரத்தினம், ஆவடி குப்புசாமி, முகவை ராசமாணிக்கம், டி. கெ. சண்முகம், தோழியர்கள் ராஜசுலோசனா, எஸ். விஜயலட்சுமி—ஆகியோர் ராசரத்தினம் அவர்களின் கலையுலக சேவை குறித்துப் பேசினார்.

இறுதியில் திருவெண்காடு டி. பி. சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிகளை அகில இந்திய ரேடியோ, சென்னைக் கிளை அன்று இரவு ஒலிபரப்பியது.]

சர்வாதிகாரச் சட்டம் நீள்கிறது...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யோடாமலும் இருப்பதற்காக முக்கிய ஊர்களெங்கும் சிறைச் சாலைகள் இருக்கின்றன!

—இவைகளெல்லாம் இருந்தும்கூட விசாரணையின்றி, சிலரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்பதற்காக காந்திய வழியில் செல்லும் இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் தடுப்புக் காவல் சட்டத்தை நிறைவேற்றுவானேன்?

உலகத்தின் எல்லா ஜனநாயக நாடுகளிலும் இது போன்ற தடுப்புக் காவல் சட்டங்கள் இருக்கின்றனவா?

இல்லை. இது போன்ற அநாகரிகச் சட்டங்கள் இல்லாமலேயே எத்தனையோ ஜனநாயக நாடுகள் நாட்டிலே அமைதியைக் காத்து வருகின்றன!

அப்படியிருந்தும் உலகத்திற்கோர் புதுமையென்று சொல்லிக் கொண்டு அஹிம்சையையும், பஞ்சசீலத்தையும் போதிக்கும் காங்கிரஸ் ஆட்சி, இந்தக் காட்டுமிராண்டிச் சட்டத்தை நிறைவேற்றுவானேன்?

காங்கிரஸ் கூடாரத்திலுள்ள சில விடுதலை விரும்பிகள் ரஷ்யா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளை குற்றம் சாட்டுவதை நாம் மறந்துவிடவில்லை.

கம்யூனிஸ்ட் நாடுகள் மீது அவர்களது குற்றச்சாட்டு என்ன?

அங்கே தனி நபர்கள் உரிமை கிடையாது. ஆனால் கட்சியினருக்கு எதிரான கருத்து கொண்டவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு உகந்த இடம் தூக்குமேடையாகவோ அல்லது சிறைச்சாலையாகவோதான் இருக்கிறது.

—இப்படித்தான் அவர்கள் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட்டு நாடுகளிலே நிலவுவதாகச் சொல்லப்படும் அந்த யதேச்சாதிகார தர்பாரின் தத்துப் பிள்ளைதான் இந்தத் தடுப்புக் காவல் சட்டமும்!

காங்கிரஸ் அரசாங்கத்துக்குப் பிடிக்காதவர்கள்; காங்கிரஸ் தேர்தலிலே ஓட்டுகளைச் சூறையாடிச் செல்வதற்குத் தடைக் கல்லாய் இருப்பவர்கள்; காங்கிரசின் செல்வாக்குப் பாறையைத் தவிடுபொடியாக்குதற்குக் கையிலே சம்மட்டியேந்தி நிற்பவர்கள்—இவர்கள் அனைவரையும் ஒழித்துக் கட்டுவதற்கு, அவர்கள் கையிலே உள்ள முதலும் முடிவுமான ஒரேயொரு ஆயுதம்தான் இந்தக் 'கருப்புச் சட்டம்'! அதனால்தான் எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு ஒரு அணியில் நின்று எதிர்த்தும்கூட பாராளு மன்றத்திலே இந்தக் 'காட்டுமிராண்டிச் சட்டம்' நிறைவேறியிருக்கிறது.

இதை நிறைவேற்றுவதற்கு ஒரு விசித்திரமான காரணத்தைக் காட்டியிருக்கிறார், உள்நாட்டு அமைச்சர் பந்த்!

ராமநாதபுரத்திலே நடைபெற்ற ஜாதிக் கலவரங்களும், திராவிடக் கழகத்தினரின் அரசியல் சட்டம் கொளுத்தும் போராட்டமும்தான் இந்தச் சட்டம் நீடிக்கப்படுவதற்கான முக்கிய காரணமாம்!

பாவம்; தேடிப் பிடித்துக் காரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார், அமைச்சர்!

ராமநாதபுரத்திலே வகுப்புக் கலவரங்களும், திராவிட கழகத்தின் அரசியல் சட்டம் கொளுத்தும் போராட்டமும் எப்போது நடைபெற்றன?

தடுப்புக் காவல் சட்டம் அமுலில் இருக்காத நேரத்திலா?

இல்லை.

தடுப்புக் காவல் சட்டமும் உயிரோடு இருந்தது. அதை அமுல் நடத்த வேண்டியவர்களும் உயிரோடுதான் இருந்தார்கள்!

எனினும் மறவர்—தாழ்த்தப்பட்டோரிடையே போராட்டம் மூளாமல் இருந்ததா?

இருதரப்பிலும் ஏராளமானவர்கள் பிணங்களாக மாறாமலிருந்தார்களா?

வீடுகள் பல எரிந்து சாம்பலாகாமல் இருந்தனவா?

அதைப் போலவே தடுப்புக் காவல் சட்டத்தினால் திராவிடக் கழகம் நாடெங்கும் அரசியல் சட்டத்திலே மூட்டிய நெருப்பு அணைக்கப்பட்டதா?

இல்லை.

அரசியல் சட்டம் கொளுத்தப்பட்டிருக்கிறது; பண்டித நேரு வெட்கித் தலைகுனிகிற அளவுக்கு ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆக; அமைச்சர் எந்த ஒரு காரணத்திற்காக இந்தக் கருப்

[தொடர்ச்சி பக்கம்—12]

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக் குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர்கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை 2—12—57 | தலைமைக் கழகம் (தி. மு. க.)

சோமநாதபுரத்துச் சிலை ...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மல்ல; உன்னையும் ஏமாற்றிவிட்டு நம் இருவருக்கும் எட்டாத இடம் நோக்கிச் சென்றுவிட்டாள். சோமநாதபுரத்துச் சிலைக்குள் மயங்கி விழுந்த புவனா மீண்டும் கண் திறக்கவே இல்லை. கறைபடா அந்த உயிர் இந்து தர்மத்தைக் கறைப்படுத்தாமலே மறைந்து போய்விட்டது. என் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை என் நிலையில் நீ உன்னைக் கற்பனை செய்து பார்த்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்!

நிர்மலானந்த சாதுவாக இருந்த வரையில் என்னிடம் உனக்கிருந்த காதல், நான் கஜினி முகம்மது என்று அறிந்தவுடன் உனக்கிருக்குமா என்று சந்தேகம் தோன்றியது. கலையும் அன்பும் கலந்து உறவாடும் உன் நெஞ்சம் மட்டும் எனக்குச் சொந்தமாகி விட்டால்...! இந்த ஆசைதான் புவனாவின் இழப்பால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய முடியும் என எண்ணினேன். நிர்மலானந்த சாதுவாகவே, கஜினி முகம்மதுவின் சார்பில் உன்னிடம் தூது வந்தேன். அப்பொழுதுதான் கஜினி முகம்மதுவான என்னை நீ எவ்வளவு வெறுக்கிறாய் என்பதையும், எவ்வளவு அன்பைக் கொட்டினாலும் உன் உள்ளத்தில் வேர்விட்டுக் கிளைத்திருக்கும் வெறுப்பைக் களைய முடியாது என்பதையும் உணர்ந்தேன். என் ஏமாற்றம் பூர்த்தியானது. ஆனால் உன்மீது மட்டும் வெறுப்பு வளரவில்லை; மாறாக, உன் ஆத்மீக உணர்வும் திடசித்தமும் என்னைப் பிரமிக்க வைத்தன. உன்மீது நான் கொண்டிருந்த மதிப்புவளர்ந்து, நீ கிட்டாமல் போய்விட்ட நஷ்டத்தைப் பெரிதாக்கிக் காட்டியது! மனமுடைந்து பாசறைக்கு வந்தேன்.

திலோத்தமா, என் அன்புச் சகோதரி, வெற்றி வீரன் என்று உலகம் என்னைக் கொண்டாடும் இந்த நேரத்தில் இந்துஸ்தானத்தின் இரு பெண்களிடம் நான் அடைந்துவிட்ட தோல்வியை மனதார ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஒன்று; உன் கலைத்திறன் பாலைநிலத்தில் காய்ந்த நிலவாகி விட்டது. கஜினி நகரின் கலைச் செல்வங்களுக்கு ஒரு தலையாய செல்வமாய் நீ திகழ வேண்டும் என்ற என்னுடைய ஆசையைக்கூட வேண்டுகோளாக்கமலே விட்டுச் செல்லுகிறேன். காரணம், மதத்தையும் இனத்தையும் தாண்டிக் கலையுணர்வை வளர்க்க உங்கள் இந்துஸ்தானம் தவறி விட்டது. கலை, மதத்தின் கையாளாகிவிட்ட நிலையில் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

கடைசியாக ஒரு ஆசை; அது உன்னாலும் புறக்கணிக்க முடியாதது. ஓநாயிடமிருந்து புவனாவின் குழந்தையை மீட்டேன். இப்பொழுது அது தாயிழந்த குழந்தையாகி விட்டது. அதைப் பராமரிக்கும் பொறுப்பு என்னுடையது. ஆனால் நல்ல இந்து தர்ம நெறியில் குழந்தை வளர வேண்டுமென்றுதான் புவனா எண்ணியிருப்பாள். ஆகவே அந்தப் பொறுப்பை நிறைவேற்றக் குழந்தையை உன்னிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லுகிறேன். புவனாவிற்கு நீ செய்யவேண்டிய கடமையும் எனக்குச் செய்ய வேண்டிய உதவியும் இதுதான்.

இதோ, கிழக்கே வெள்ளி முளைத்துவிட்டது. என் பரிவாரங்கள் தாய் நாடு நோக்கிக் கிளம்பிவிட்டன......கம்பீரமான கண்ணைப் பறிக்கும் காட்சி! வாழ்க்கையின் மகத்தானதொரு கனவு நிறைவேறும் கட்டம்...சீரழிந்து தரைமட்டமான இந்து ஆலயங்கள்..... அதோ, கஜினி நகரில் வான் முட்ட வளர்ந்து நிற்கும் மசூதிகள்......கஜினி முகம்மதுவின் ராஜ சபையில் வானாராய்ச்சி நிபுணன் பைரூனி, வரலாற்றுப் பேராசிரியன் உட்பி, தத்துவ ஞானி ஃபராபி, நகைச்சுவை மேதை பைஹாக்கி, எல்லோருக்கும் மேலாக பாரசீக இலக்கிய மறுமலர்ச்சியின் பிதா ஃபர்தூஸி....ஆனால்....ஆனால்...சபையில் கலையில்லை; கஜினி முகம்மதுவின் உள்ளத்தில் பயங்கரமான சூன்யம்...! இதுதான் சகோதரி நிலை!

இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது நான் வெகு தூரம் போயிருப்பேன்... வெறுப்பு நீங்கி உள்ள நிறைவோடு நீ என்னை இப்பொழுது வாழ்த்தலாமல்லவா? அதுதான் எனது ஒரே ஆறுதல்; கடைசி ஆறுதல்!

அன்பு மறவாத,

கஜினி முகம்மது

கடிதத்தைப் படித்து முடித்த திலோத்தமாவின் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சிகள் இத்தன்மையது என்று அவளாலேயே அறிய முடியவில்லை. அவளுடைய உள்ளம் வெறிச்சோடிருந்தது. மார்போடு அணைக்கப்பட்ட குழந்தை அந்த அரவணைப்பில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. திலோத்தமாவின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் குழந்தையின் உடலை நனைத்திருந்தது. குழந்தையைச் சிறிது நேரம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். ஈடேறாத தாய்மையுணர்ச்சி திடீரென்று அவள் இதயத்திலிருந்து பொங்கிக் கிளம்பியது. குழந்தையைத் தூக்கி முகத்தோடு சேர்த்து முத்தமழை பொழிந்தாள். புதிய உணர்ச்சி உந்தித் தள்ள வெளியே ஓடினாள். வெளியே காவலில்லை. கண்ணுக்கெட்டிய தூரம்வரை நிரம்பியிருந்த கூடாரங்கள் இப்பொழுது ஒன்றுமே இல்லை!

ஆம், கஜினி முகம்மதுவின் படைகள் போய்விட்டன. திலோத்தமா விரிந்து பரந்து கிடந்த மணல் வெளியைப் பார்த்தாள். தூரத்தில் வழக்கம்போல் கடல் அலைகள் கர்ஜித்துக் கொண்டிருந்தன. மணல் வெளியில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு பைத்தியம் போல் ஓடினாள். மணற் குன்று ஒன்றின் மீது ஏறி தொடுவானத்தை நோக்கினாள். கீழ்வானம் வெளுக்க ஆரம்பித்திருந்தது. எங்கோ தொலை தூரத்தில் 'அல்லாஹு அக்பர்!' என்ற கோஷம் கிளம்பிக் காற்றில் கலந்து மறைந்து கொண்டிருந்தது!

(முற்றும்)

★★★

உடைகிறது, 'ஒலிபெருக்கி'!

"அர்த்தநாரீகள்"; "இரட்டை நாக்கு படைத்தவர்கள்"—இந்தப் பதங்கள் உபயோகிக்கப்பட்டால் அரசியலைப் பொறுத்த வரையில் அது எந்தக் கட்சியைக் குறிக்கும் என்று யாருக்கும் விளக்கம் தர வேண்டியதில்லை.

—ஏனெனில் அவ்வளவுக்கும் ஏகபோக உலக உரிமையைக் கொண்டிருக்கிறது, அந்தக் கட்சி!

ஒரு நாள் முதலாளிகள் ஒழிக—என்பார்கள். முதலாளிகள் யாராயிருந்தாலென்ன; டாட்டாவாக இருந்தாலும் சரி; ராஜா சர் முத்தையா செட்டியாராக இருந்தாலும் சரி — அவர்கள் அனைவரும் ஒழிக்கப்பட வேண்டியவர்கள்தான்—என்று முழக்கமிடுவார்கள்.

மறுநாள் சேலத்து மாக்னசைட் சுரங்கத்தை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்; இல்லையேல் தென்னாட்டு முதலாளிகள் யாராவது முன் வந்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் — என்று பத்திரிகையிலே எழுதுவார்கள்!

அவர்கள் அகராதிப்படி வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் எந்தவித வேறுபாடுகளும் கிடையாதாம்!

ஆனால் முதலாளிகளிலே மட்டும் இரு பிரிவுகள் உண்டாம். வடநாட்டு முதலாளிகள்; தென்னாட்டு முதலாளிகள்—என்பதுதான் அந்தப் பிரிவாம்!

—இப்படியெல்லாம் அவர்கள் வெட்கமின்றிச் சொல்வார்கள்!

அதைப் போலவேதான் இப்போது இன்னுமொரு வெட்கக்கேடான நிகழ்ச்சியும் நடைபெற்றிருக்கிறது!

இது வரையில்—ஏன்; இன்றும்கூட — கம்யூனிஸ்ட்களைப் பற்றி ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது.

மாஸ்கோவிலுள்ள 'கிரெம்ளின்' மாளிகையில் ஒரு கம்யூனிஸ்ட் என்ன பேசுகிறாரோ; அதையேதான் மணலியில் இருக்கும் கம்யூனிஸ்டும் அட்சரம் பிசகாமல்; சுரம் பேதலிக்காமல் பேசிக் கொண்டிருப்பார்.

—ஆனால் இப்போது ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட்டுகள் ஒருவருக்கொருவர் சுரம் விட்டுப் பாடுகிறார்கள்; தரங்கெட்ட வாதங்களை நடத்துகிறார்கள்.

உதாரணமாக சென்னை சட்டசபையிலே தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது நினைவிருக்கலாம்.

அப்போது சட்டசபையிலே கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன?

யாருடைய தோல்விக்காகப் பெரியார் அல்லும் பகலும் பாடுபட்டாரோ அந்த தி.மு.கழக உறுப்பினர்களைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியின் மடியிலே மயங்கிக் கிடந்தார்கள்!

—அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து தோழர் கல்யாணசுந்தரம் 'அநாயாசமாக விளாசினார்'!

அன்றைய வாக்கெடுப்பின் போது சட்டசபையிலே 'எதிர்க் கட்சிகள்' இல்லை; தி. மு. க. என்கிற 'எதிர்க் கட்சி'தான் இருந்தது!

அன்று கம்யூனிஸ்ட்டுகள் பெரியாரின் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்திருக்கவேண்டுமென்று நாம் கூறவில்லை.

ஆனால் அவர்கள் அந்தத் தேசிய கௌரவச் சட்டத்தை எதிர்க்கவேண்டியதற்கு அநேக காரணங்கள்— ஆணித்தரமான காரணங்கள் இருக்கின்றன!

"தேசிய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு இப்போது என்ன அவசரம் வந்தது? எதிர்க் கட்சிகளை அடக்குவதற்கென்றேதான் நீங்கள் தடுப்புக் காவல் சட்டம் என்னும் கருப்புச் சட்டத்தை வைத்திருக்கிறீர்களே! உங்கள் கையாலாகாதத் தன்மையை உலகுக்கு அறிவிப்பதுபோல் ஏன் புதிதாக ஒரு சட்டம் கொண்டு வருகிறீர்கள்? இப்படி ஒரு சட்டம் இருப்பதே தேசிய கௌரவத்திற்கு அவமானமாயிற்றே!"

—இப்படிக் கண்டித்திருக்க வேண்டும்; கம்யூனிஸ்ட்டுகள்! ஆனால் அன்றைய தினம் அவர்கள் காங்கிரசுக்குக் 'குலாமா'னார்கள்!

—இது சென்னைக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலை!

ஆனால் டில்லிக் கம்யூனிஸ்ட்டுகளின் நிலை என்ன தெரியுமா?

பாராளு மன்றத்திலே தடுப்புக் காவல் சட்டத்தை முதுகுளத்தூர் கலகம் காரணமாகவும்; திராவிடர் கழகத்தின் கிளர்ச்சி காரணமாகவும் நீடிக்கிறோம் என்று அமைச்சர் பந்த் குறிப்பிட்டார் அல்லவா?

அப்போது பேசிய கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே, "அரசியல் சட்டத்தை எதிர்க்கும் ஒருவர் அதைக் கொளுத்துவதைத் தடுக்க எந்த நாட்டிலும் சட்டமில்லை என்றும்; காந்திஜி உயிருடன் இருந்திருந்தால் தம் படத்தைச் சட்ட மூலம் பாதுகாக்க முயற்சிப்பதை எதிர்த்திருப்பார்" என்றும் கூறினாராம்!

டில்லி கம்யூனிஸ்ட் சென்னை கம்யூனிஸ்டின் பேச்சுக்கு நேர் எதிர்மாறாகப் பேசியிருக்கிறார்!

பாவம்; மாஸ்கோவின் 'ஒலி பெருக்கிகள்'தான் உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்ட்டுகள் என்பார்கள்!

ஆனால் இப்போதோ சென்னை கம்யூனிஸ்ட் ஒலி பரப்பியதை மறுத்து; டில்லி கம்யூனிஸ்ட் வேறொன்றை ஒலி பரப்புகிறது!

அந்தோ, பரிதாபம்! அந்த 'ஒலி பெருக்கி'யிலே ஏதோ ஒரு பெருத்த கோளாறு ஏற்பட்டு விட்டது; சரி செய்ய முடியாத அந்தக் கோளாறு 'ஒலி பெருக்கிக் கம்பெனி'யை எந்த நிலைக்குக் கொண்டுவரப் போகிறதோ, தெரியவில்லை!

'பரந்த மனப்பான்மை'!



துளி •

ஆசிரியர்: மழலைப்பித்தன்

ஓவியர் மணியம் தீட்டிய அழகிய முகப்பும், நண்பர் சுரதா ஏற்ற முறையில் தந்துள்ள அணிந்துரையும், நூலுக்கு மேலும் கவின் சேர்க்க, வெ. தே. கனகசபை என்னும் மழலைப்பித்தன் யாத்த கவிதை நூலாகும் இது. பகுத்தறிவுக் கருத்துகளும், உவமை நயங்களும் ஒருங்கே மிளிர, எளிமையும், கற்பனைச் செறிவும் எழிலூட்ட, முழுவதும் விருத்தப் பாக்களாலேயே ஆக்கப்பட்டுள்ள இந்நூல் சுவை நிறைந்து விளங்குகின்றது. கதைக்குள் கதையாக நீட்டிச் செல்லாமல், நீளத்தைக் கொஞ்சம் குறைத்திருந்தால் முதல் தரமான நூலாகவே இதனைக் கொள்ளலாம். எனினும், யாவரும் விரும்பிப் பயிலும் வண்ணமே அமைந்துள்ளது.

விலை: ரூ. 2

கிடைக்குமிடம்:

பாரி நிலையம், சென்னை-1

இந்தி ஏன்...?

தொகுப்பு நூல்

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிகழ்த்திய பேருரைகளின் சுருக்கமும், மற்றும் இப்போது இந்தித் திணிப்பை எதிர்த்துவரும் சி. இராசகோபாலாச்சாரியார், டாக்டர் சுப்பராயன், திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை ஆகிய பெருமக்களின் சொற்பொழிவுகளின் சாரங்களும் ஒரு சேரத் திரட்டி, காலத்துக்கேற்ற வண்ணம் வெளியிட்டுள்ளனர் மதுரை மாவட்ட தி. மு. கழகத்தார். சிறு நூல்—பெரு முயற்சி! விலை அணா மூன்றுதான்.

நீரும் நெருப்பும்

ஆக்கியோர்: ரவி, பு. ரா. வேங்கடாசலம்

நாற்பத்து மூன்று காட்சிகளையும், புரட்சிகரமான முடிவையும் கொண்ட இச் சமூக நாடகத்தை, நடிப்பதற்குதவும் வகையில் இடையிடையே ஏற்ற பாடல்களையும் சேர்த்து, தக்க குறிப்புகளோடு ஆக்கியுள்ளனர் இந்த "இரட்டையர்". பாத்திர அமைப்புகளும், நிகழ்ச்சிகளின் சேர்க்கைகளும் நாடகம் நல்ல சுவையுடன் இயங்குமாறு வகுக்கப்பட்டுள்ளன.

விலை: மலிவுப் பதிப்பு ரூ. 0—50
பரிசுப் பதிப்பு ரூ. 1—25

கிடைக்குமிடம்:

பாரதி புத்தக நிலையம், டவுன்ஹால் ரோடு, மதுரை

குழந்தைப் பாடல்கள்

ஆசிரியர்: மு. தமிழரசு

முப்பது வகையான பல்வேறு தலைப்புகளில் குழந்தைகளுக்கென்று எளிய சொற்களில் இயற்றப்பட்டுள்ள பாடல்களைக் கொண்டது இந்நூல். இதிலுள்ள சில பாடல்கள் ஐந்தாறு வயதுக் குழந்தைகளுக்கும், வேறு சில, பத்துப் பன்னிரண்டு வயதுக் குழந்தைகளுக்கும் புரியக் கூடிய விதத்தில் அமைந்துள்ளன. இந்த முறையைவிட, இன்ன வயதுக் குழந்தைகளுக்கென்று வரையறை செய்து கொண்டு அதற்கேற்ப எழுதுதலே சிறந்ததாகும்.

விலை: 25 காசு

கிடைக்குமிடம்:

சொர்ண முத்து நிலையம், தென்மாப்பட்டு, திருப்பத்தூர்
(ராமநாதபுரம்)

கால வெள்ளத்தில் கலைவாணர் ..

ஆசிரியர்: புதுவைவாணன்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் சிறப்பியல் புகளை இச்சிறு நூலில் ஓரளவு காட்ட முயன்றுள்ளார் இதன் ஆசிரியர். எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன.

விலை: மூன்றணா

கிடைக்குமிடம்:

கண்ணம்மாள் பதிப்பகம், கடலூர் என். டி.

பிறைவானம் ...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

மறுநாள் காலை அவசர அவசரமாகப் பள்ளிக்கு ஓடினேன். காத்திருந்தேன். 'எங்கே குமார்?' என்று என் விழிகள் சுற்றி அலைந்து கொண்டேயிருந்தன.

குமார் வரவேயில்லை!

என்ன ஆயிற்று அவனுக்கு? நான் யோசித்தேன். யோசனையின் எல்லையிலே நான்தான் 'அபர்ய அறிவிப்பா'க நின்று கொண்டிருந்தேன். ஏன் வரப்போகிறான் அவன்? இனி அவனுக்கு இங்கென்ன வேலை? அன்பு செலுத்தி வந்த ஆசிரியை நான்—அகோர உருவமெடுத்து அவனை அடித்து வீழ்த்திய பின்; மழலை மாறுத பச்சிளம் சிசு அவன்—பச்சை ரத்தம் கொதிப்பேற சித்ரவதை செய்யப்பட்டபின் — அவனுக்கு என்ன இங்கு வேலை?

மனதில் ஏதோ ஒரு நம்பிக்கை—காத்துக் கொண்டிருந்தேன்!

மாலையும் வந்தது—பள்ளியும் ஓய்ந்தது—இருளும் சூழ்ந்தது! குமார் வரவேயில்லை!

அவன் எப்படி என் முகத்திலே விழிப்பான்? நான் அவன் கண்களுக்கு அன்போடு உபசரிக்கும் ஆசிரியையாகவா தோன்றுவேன்? ஒரு கையிலே இரத்தம் சொட்டும் தலையும், மறு கையிலே சூலமும் ஏந்தி—நீண்ட நாக்கு நெஞ்சுவரை தொங்க—அகோர நர்த்தனம் ஆடும் மாகாளியின் உருவமாக அல்லவா தோன்றுவேன்! இனி என்னைப் பார்ப்பானா? அவன் வரவேமாட்டான்! இனி இந்தக் கறைபடிந்த கலாசாலையிலே அடியெடுத்தும் வைக்க மாட்டான்!

அவன் வரவே இல்லை; மறு நாளும்கூட — மீண்டும் இரு நாட்கள்கூட! காத்து அலுத்தேன்—கலங்கித் தவித்தேன்—தனியிடத்தில் கத்தியும் தீர்த்தேன்! ஆனால் குமார் என்னிடமிருந்து பறித்துச் சென்ற அமைதி; அது எனக்குக் கிடைக்கவே இல்லை!

நான் சோகத்தின் உருவமானேன்—மறுநாள் முதல் பள்ளிக்கு 'லீவ்' எழுதிப் போட்டுவிட்டு வீட்டிலேயே படுத்துவிட்டேன்!

உலகமெல்லாம் பரவி பாழ்படுத்திய கொடிய 'ப்ளூ' நோய் என்னைப் பீடித்தபோதுகூட நான் இவ்வளவு வலுவிழந்து போய்விடவில்லை; இரவு பகலாகக் கண் விழித்து பரீட்சைத் தாட்கள் திருத்திய போதுகூட இத்தனை களைப்படைந்ததில்லை. ஆனால் இப்போதோ படுக்கையை விட்டும் எழுந்திருக்க முடியாத அளவுக்கு சோர்ந்து கிடந்தேன். மனநோய் என்னைப் படுக்கையிலேயே கிடத்தி விட்டது.

என் மனச்சாட்சி என்னை உறுத்திற்று; உலுக்கிற்று!

குமார் என்னை பயங்கரவாதியாக எண்ணி விட்டான். என்னிடம் அவன் கொண்டிருந்த தூய பாசம் தூள் தூளாகி விட்டது. அவன் எங்கேயோ போய் விட்டான். வேறு பள்ளிக்குச் சென்றிருப்பானோ; வேறு ஊருக்கே சென்று விட்டானோ; அல்லது என் அடி பொறுக்க முடியாது 'வேறு உலக'த்திற்கே சென்று விட்டானோ!

இதை எண்ணிய மாத்திரத்தில் என் தலை கிறுகிறுத்தது. என் கண்கள் நிலையின்றி சுழன்றன. அந்தச் சுழற்சியிலே அதோ...அந்த புத்தரின் படம்! என்னைப் பார்த்து சிரித்தது... இல்லை...... சீறியது......ஆமாம்; 'என்னை ஏன் இன்னும் மாட்டி வைத்துக் கொண்டிருக்கிறாய்? எறிந்துவிடு வெளியே!' என்று சினத்தால் சீறியது!

நான் விக்கி விக்கி அழுதேன். படுக்கையை விட்டு எழுந்தேன். வேக வேகமாக ஓடினேன். புத்தர் படத்தை நெருக்கினேன். பதட்டத்தோடு கழற்றினேன். "வீசி எறிகிறேன் வீதியிலே! குழந்தையின் மனதறியா இந்தக் கொடியவளின் வீட்டிலே உங்களுக்கு இனி வேலை இல்லை, மேதேயே!" என்று அலறினேன். வாசலை நோக்கி ஓடினேன்.

அங்கே?...

என் கண்கள் எதைக் காண்கின்றன?

என் மூளை குழம்பிவிட்டதா? நான் பைத்தியக்காரியாகி விட்டேனா? மனப் பிராந்தியா? என் எதிரிலே என்ன இது விசித்திரம்? நான் அதிர்ச்சி அடைந்தேன் — அசையாது நின்றேன் சிலை போல!

"டீச்சர்!..."

சந்தேகமில்லை......என் குமாரின் குரலேதான் அது!

"டீச்சர்......நான் திடீர்னு என் அக்காவின் ஊருக்குப் போயிருந்தேன் டீச்சர்!...அதனுல்தான் ஒரு வாரமா 'ஸ்கூலு'க்குக்கூட வரலே டீச்சர்!..."

என்ன?...குமார்தான் பேசுகிறான்! எதிரே நிற்பதும் அவனேதான்!

"குமார்!......"—என் கதறலை எதிரொலிக்க எதிரே மலை இல்லை. ஆனால் அந்தக் குரல் முன்னிரவு நேரத்திலே படுக்கைக்குச் சென்றுவிட்ட பலரை எழுப்பித்தான் விட்டிருக்கும்!

"அக்காவுக்கு குழந்தை பிறந்திருக்கிறது டீச்சர்! குழந்தை எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா, டீச்சர்? அக்கா எனக்கு நிறைய தின்பண்டங்கள் செஞ்சு கொடுத்துச்சு!........ இதோ...உங்களுக்கும் கொண்டு வந்திருக்கிறேன்........இந்தாங்க டீச்சர்!..."

குமார் கையிலேயிருந்த பையை என்னிடம் நீட்டினான். என் கையிலேயிருந்த புத்தர் படம் 'தடால்' என்று கீழே விழுந்தது. நான் தாவி ஓடினேன்; பட்சணங்கள் வாங்க அல்ல! அந்தப் பாலகனைக் கட்டித் தழுவ!

நான் மன்றாடினேன், "என்னை மன்னித்து விடடா கண்ணே!" என்று!

"நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள் டீச்சர்! நான் உங்களிடம் சொல்லிக்காம இனிமே எங்கேயும் போகமாட்டேன்!" என்றான் குமார்!

அந்தப் பிஞ்சு நெஞ்சிலே பொதிந்து கிடந்த பாச உணர்வு என் கண்களிலே கண்ணீரைப் பெருக்கிற்று-நெஞ்சிலே வள்ளுவரின் இலக்கணம் வகுத்த 'அருளை'ப் பாய்ச்சிற்று!

நான் கீழே பார்த்தேன். புத்தர் படம் உடையவே இல்லை! அந்த புத்தர் இப்போது சினத்தால் சீறவில்லை — சிரித்துக் கொண்டிருந்தார்!

★ குறள் விளக்கக் கதை ★

"பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்"

—என்ற குறளை வைத்துக் கதை ஒன்று எழுதும்படிக் கூறினார் அந்த ஆசிரியை.

மாணவ மாணவிகள்—தங்கத் தமிழ்க் குழந்தைகள் கதைகள் தீட்டிக் காட்டினார்கள். அவைகளைப் பரிசீலித்த ஆசிரியையின் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

"அருள் மறந்தவர்கள் குறிக்கோளே அற்றவர்கள்" என்ற தத்துவத்தை விளக்கும் அந்தக் குறளுக்கு ஏற்றதாக தன் வாழ்க்கையிலேயே நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அந்த ஆசிரியை நினைத்தார். நினைத்ததைச் சொல்கிறார். அதுவே மேற்கண்ட குறளுக்கு விளக்கமாகவும் — உங்களுக்கு ஒரு கதையாகவும் அமைந்து விட்டது!

சினம் காக்க...!

என் மனம் ஒரு நிலையில் இல்லை. நான் தத்தளித்துக் கொண்டிருந்தேன். என் எதிரே இருக்கும் பொருள்கள் எல்லாம் எனக்கு வேம்பாக இருந்தன— அவைகள் என்னை வெறுக்கின்றனவா? 'நீயும் ஒரு பிறவியா? நீ ஆசிரியையாக இருந்து என்ன பலன்? மழலைகளுடன் பழகும் மாண்பு உன்னிடம் இல்லையே, துரோகி!' என்று தூற்றுகின்றனவா? எனக்கு அவைகளைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது.

குற்றம் புரிந்தவர்களுக்கு நிம்மதி என்பதேது — என்று சொல்லுகிறார்களே; எவ்வளவு மகத்தான உண்மை! இதோ, நான் துடிதுடித்துத் — துவண்டு— தவித்துத்—தடுமாறிக் கொண்டிருக்கிறேனே அது ஒன்று போதாதா?

என் அறையைச் சுற்றி ஒரு முறை பார்வையிட்டேன். சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த புத்தர் படம் என் கண்களிலே தென்பட்டது. ஆனால்........... ஆனால்........அந்த முகத்திலே காண வேண்டிய அருள் எங்கே? அன்பு மறைந்து ஆத்திரம் எங்கிருந்து குடி புகுந்தது அதிலே?

"அடி முட்டாளே, மாசு மருவற்ற குழந்தைகளுடன் பழகும் பண்பு உன்னிடம் இல்லையே! உனக்கு வெட்கமில்லையா? உலகத்திற்கு எல்லாம் அன்பு போதித்த என் படம் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? எடுத்து எறிந்து விடு வீதியிலே! அல்லது தீயுக்கு இரையாக்கி —இனிமேல் இத்தகைய தீய நிகழ்ச்சிகளை நான் பார்க்காமல் பொசுக்கி விடு! ...ம்...பொசுக்கி விடு!..." என்று அந்தப் படத்து புத்தர் என்னைக் கேட்கிறாரா?

நான் முகத்தை மூடிக் கொண்டு "ஐயோ!" என்று அலறி விட்டேன்.

மாட்டேன்; மாட்டேன்! நான் அந்த புத்தர் படத்தை எடுத்து எறிந்து விடமாட்டேன்! அந்தப் படத்தை எனக்கு ஆசையோடு —அன்போடு தந்தவன் என் கண்மணி குமார் அல்லவா?

குமார் — குழலை வெல்லும் மழலை பேசும் அந்தக் குழந்தைச் செல்வம் என் நெஞ்சிலே நடை போட்டான். "டீச்சர்! டீச்சர்!" என்று பண்ணிசை போல் அழைத்துப் பல்லிளித்து ஓடி வரும் அந்தப் பாலகனைத்தான் ...ஐயையோ! நான் என்ன சொல்வேன்?.:.......அந்த வேதனையை எப்படித்தான் விளக்குவேன்?

நான் மனிதத் தன்மை மறந்த அந்தக் கதையை — மிருகத்தினும் கேவலமாக நடந்து கொண்டு விட்ட சோகக் கதையை எண்ண எண்ண நெஞ்சிலே எழுந்து அடங்கும் வேதனைப் பெரு வெள்ளத்தை எப்படித்தான் தடுப்பேன்?

"குமார்! கண்ணே குமார்! என்னை மன்னித்து விடடா!..." —நான் என்னையும் மீறி அலறி விட்டேன்!

"மன்னிப்பதா?........உன்னையா? குண்டெறிந்து என்னைக் கொல்ல நினைத்தவனை நான் கொடியவன் என்று சொல்லவில்லை; மன்னித்து விடச் செய்தேன்! துப்பாக்கி முனையிலே என் உயிரையே பலி வாங்கி விட்டானே கோட்சே —நான் மாளாதிருந்திருந்தால் அவனையும் மன்னித்து விடுங்கள் என்றுதான் சொல்லியிருப்பேன் ...ஆனால், குழந்தைகளின் நெஞ்சு அப்படிப்பட்டதல்ல அம்மா! அந்த அப்பழுக்கற்ற தூய நிலத்திலே சிறு விதை விழுந்தாலும் போதும்; செழித்து, வளர்ந்து, பல கிளைவிட்டு, மாபெரும் விருட்சமாக வளர்ந்து விடும், அம்மா!......குமாரும் உன்னைக் கொடியவள் — தன்னை அடித்துப் புடைத்தவள் என்று எண்ணி விட்டால்...அந்த பயம் அவனுக்கும் உனக்கும் உள்ள பாசத்தைப் பாழாக்கி விடும்!"

அறையிலேயிருந்த மாமேதை காந்தியாரின் சிலை என்னைப் பார்த்து கண்ணீர் விடுவதாக நான் உணர்ந்தேன்!

குமார் என்னை மன்னிக்க மாட்டானா? என் கண்களிலிருந்து 'குபு, குபு' என்று கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது...

இப்படித்தானே அன்று பள்ளியிலே குமாரும் கண்ணீர் விட்டான்...அந்தக் கண்ணீருக்கும் கலங்காமல்தானே நான் கல்லினும் கொடிய நெஞ்சுடையவளாக நடந்து கொண்டு விட்டேன்!

'பள்ளியிலே கம்புகள் இருக்கக் கூடாது; அப்படி இருந்தாலும் அவை அடிப்பதற்காகக் கூடாது; பயமுறுத்தத்தான் பயன் படுத்தப்பட வேண்டும்' —என்று சட்டமிருப்பதைக் கூட நான் மறந்து விட்டேனே! அந்த அளவுக்கு குமார் செய்து விட்ட குற்றம்தான் என்ன?

குழந்தைகளின் கூடப் பிறந்தவை இரண்டு—ஒன்று நிழல்; மற்றொன்று விளையாட்டு புத்தி என்பார்கள். வருடத்தில் பெரும் பகுதி நாட்கள் குழந்தை உலகத்திலேயே நடமாடிக் கொண்டிருக்கும் நான், அந்த உண்மையை ஏனோ மறந்து போனேன்! ஆத்திரத்தால் அறிவிழந்தேன்.

பள்ளிக்கு அருகாமையிலிருந்த மாந்தோப்பிலே கல்லெறிந்தான் குமார் என்று குற்றச்சாட்டு. தலைமை ஆசிரியரோ 'கள்ளத்தனமாக மாங்காய் அடித்த குமாரைத் தண்டிக்க வேண்டும் உடனேயே' என்று தாக்கீது அனுப்பி விட்டார். விளையாட்டுத்தனத்தை விபரீதமான திருட்டாக மாற்றி விட்டார் அவர். காரணம், அந்தத் தோப்பு அவருக்குச் சொந்தமாயிற்றே!

தூரத்து உறவினர் ஒருவரின் மரணச் செய்தி கிடைத்திருந்த நேரமது—நான் மனக் குழப்பத்தில் இருந்தேன். அப்போதுதானா என் கண்களில் தென்பட வேண்டும் அவன்!

"குமார்!..." என்று அழைத்தேன். இல்லை; அதட்டினேன். என் குரலிலே பொதிந்து கிடந்த கோபத்தினை குமார் உணர்ந்து கொண்டிருக்கத்தான் வேண்டும்; அவன் நெஞ்சிலே பயமும் தோன்றியிருக்கத்தான் வேண்டும்! இல்லாவிடில் "வர்ரேன் டீச்சர்!" என்று குதித் தோடிப் பாய்ந்து வரும் அந்தக் குழந்தை ஏன் பதுங்கிக் கொள்ள வேண்டும்?

"வர்றியா; இல்லையா?"— என்று எனது தற்காலிக ஆத்திரம் மீண்டும் கோபக் குரல் எழுப்பியது. கை தானாகப் பிரம்பை எடுத்தது. குமார் வரவில்லை; நான்தான் சென்றேன், அவனிடம்.

குமாரின் சிரித்த முகம் பயத்தால் சூம்பிக் கிடந்தது. கவர்ந்திழுக்கும் அவனது காந்தக் கண்களில் கலக்கம் புகுந்து கொண்டிருந்தது. ஆனால் அங்கே கரை உடைத்த வெள்ளமென கண்ணீர் பெருக்கெடுத்தோட வழி செய்து விட்டேன் பாவி நான்!

"மாங்காய் அடித்தாயா; மடையனே!" என்று நான் அடித்தேன் அவனை! ஆத்திரம் தீருமட்டும் அடித்தேன்; "ஐயோ, டீச்சர்! இனிமேல் இல்லை டீச்சர்!" என்று அவன் அழுது புலம்பி அலறும் அளவுக்கு அடித்தேன்; அடித்துக் கொண்டேயிருந்தேன்:

எப்போது அடிப்பதை நிறுத்தினேன்? அது எனக்கே தெரியாது! வாழ்க்கையிலேயே முதல் முறையாக புரட்சி நிறைந்த செயல் ஒன்றை செய்து முடித்தவளைப்போல் நான் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தேன். எதைப் பார்க்கிறேன்? நானறியேன். என் விழிகளில் துளிர்த்து நின்ற நீர் என் பார்வையையே மறைத்து விட்டது. ஆனாலும் விக்கி விக்கி எழும் விம்மல் ஒலியைக் கேட்டு நான் புரிந்து கொண்டேன்—குமார் தன் வீடு நோக்கி ஓடிக் கொண்டிருந்தான்.

"போயிட்டு வரேன் டீச்சர்! அம்மா 'டிபனை' வச்சுக்கிட்டு காத்துக்கிட்டிருப்பாங்க!......... வரட்டுமா?... உம்....வரட்டுமா? டா...டா!" என்று பிரிந்து செல்ல மனமின்றி, பிரிந்து செல்லும் அந்தப் பாலகன்— இப்படி அலறித் துடித்து ஓடுகிறானே!

நான் செய்து விட்ட தவறை அப்போதுதான் உணர்ந்தேன்! குமாரின் ஏக்கம் கலந்த முகம்— மிரண்டுபோன தோற்றம்—படபடக்கும் உடல்—அவை அனைத்தும் ஒருகணம் என் மனக் கண்களில் நிழலாடின. அதையும் கவனியாமல் அல்லவோ நான் காட்டு வாழ் மனிதர்களின் பகுத்தறிவில்லா பண்பில் நடந்து கொண்டு விட்டேன்— ஈவு இரக்கமற்ற முறையில் அடித்துப் போட்டு விட்டேன்!

அதன் பலன்தான் இதோ வீட்டுக்கு வந்த பின்னரும் விழிகள் குளமாக நின்று தீவிக்கிறேன்!

வாழ்க்கையிலே முதன் முறையாக மாபெரும் தவறொன்றைச் செய்து விட்டேன், நான்!

பள்ளிக்கு வருவான் குமார்; அவனைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும்; "மன்னித்து விடடா, என்னை!" என்றி கெஞ்சிக் கதற வேண்டும் — என்ற முடிவோடுதான்

[தொடர்ச்சி பக்கம்—10]

எழுத்தாணி

எம். ஆர். கண்ணன்; அயன்புரம்

(?) பண்டித நேருவைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

சென்ற வாரம்தான் அவர் ஒரு வட்டநாட்டுக் கக்கன் என்று அறிஞர் அண்ணா, அவர்கள் குறிப்பிட்டார்கள்!

'திராசு'; பெங்களூர்

(?) எங்கள் புது வீட்டைத் திறந்து வைக்க பண்டித நேருவை அழைத்தால் வருவாரா?

தென்னாட்டுக்கு வந்து போவதற்கு வேறு காரணம் கிடைக்காத நேரம் உங்கள் அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கி. அய்யாசாமி; திருப்பூர்

(?) "எங்களுடைய அரசியலமைப்பு பிடிக்காதவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் வேறு நாட்டுக்குப் போய் விடுவது நல்லது" என்று நேரு பேசியிருக்கிறாரே?

அப்படியாவது போக விடுகிறார்களா? நாள்தோறும் நூற்றுக் கணக்கில் இலங்கைத் தீவுக்குக் கள்ளத் தோணியில் செல்ல முயற்சிப்பவர்களெல்லாம் யார்? வயிற்றுப் பசியை அடக்க முடியாமல் காங்கிரஸ் அரசாங்கத்தின்மீது காறி உமிழ்பவர்கள்தான்! அவர்களையெல்லாம் தடுக்காமலிருக்கிறாரா, பண்டிதர்?

பாவம்; நாக்கிலே நரம்பில்லாதவர் வேறு என்னதான் செய்வார்?

த. கலியபெருமாள்; முருகன்குடி

(?) நேரு தமிழ் பேசினாராமே; இனிமேல் தமிழ் கற்றுக் கொள்வாரா?

கற்றுக் கொள்ள மாட்டார். ஏனெனில் தமிழில் பாண்டித்தியம் பெற்று விட்டால் பிறகு அநாகரிகமாகத் திட்ட முடியாதே-அதனால்!

பி. கே. எம். உபயதுல்லா; சிங்கபெருமாள்கோயில்

(?) பெரியாரும் காமராசரும் சந்தித்தால் என்ன நடக்கும்?

பெரியார் காமராசரிடம் ஒரு துண்டைக் கொடுப்பார், முக்காடு போட்டுக் கொள்ள!

பி. எம். சம்பத்குமார்; பூந்தமல்லி

(?) பண்டிதர் ஒரு வெற்றி வீரரா?

இல்லை; நாகர்கள் என்னும் 'காட்டுமிராண்டிகள்' அவரைப் பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடும்படிச் செய்திருக்கின்றனர்.

'பிஜோ' என்று பெயர் பெற்ற அந்தக் 'காட்டுமிராண்டி'களின் தலைவனைப் பிடிப்பதற்குக் கையாலாகாத அவர்தான் மற்றவர்களைப் பார்த்துக் 'காட்டுமிராண்டிகள்' என்கிறார்!

மு. வீரணன்; சின்னமனூர்

(?) பஞ்சசீலத்தின் தூதுவர் திண்டுக்கல் பொதுக் கூட்டத்தின் போது தென்னாட்டில் முட்டாள்களுக்குப் பஞ்சமில்லை என்று கூறியிருக்கிறாரே ஏன்?

பக்கத்தில் சூழ்ந்திருந்த அமைச்சர்களையும், காங்கிரஸ்காரர்களையும் பார்த்ததும் அவருக்கு அந்த நினைப்பு தோன்றியிருக்கும்; உடனே அதை வெளியிட்டிருப்பார் — அவ்வளவுதான்!

எஸ். சுந்தரா மணாளன்; அம்பத்தூர்

(?) சென்னை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள திடலில் பேசிய பண்டித நேருவின் பேச்சைக் கேட்டு ஆஸ்பத்திரிக்கு உள்ளே இருந்த பைத்தியங்கள் என்ன நினைத்திருப்பார்கள்?

நோயாளிகள் ஆஸ்பத்திரிக்கு உள்ளே மட்டும் இல்லை— என்று நினைத்திருப்பார்கள்!

விருந்துகிறோம்

நமது தம்மம்பட்டி முரசொலியின் விற்பனையாளராக நீண்ட காலம் பணியாற்றிய தோழர் கே. டி. வெங்கடாசலம் அவர்கள், சென்ற 5—12—57 அன்று இயற்கை எய்தினா[illegible] செய்தி கிடைத்து ம[illegible] வருந்துகிறோம். அ[illegible]வது குடும்பத்தாருக்கு எங்[illegible] அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

46-வது வட்ட தி. மு. க. வளர்ச்சி நிதிக்காக
5—1—1958 ஞாயிறு மாலை 6-மணிக்கு
தியாகராயநகர் வாணி மகாலில்
மு. கருணாநிதி தலைமையில்
சென்னை முத்தமிழ் நாடக மன்றத்தார் நடிக்கும்

'எதிரொலி'

(நாடகம் நடைபெறும்)
கதை, வசனம், பாடல்: டி. கே. தண்டபாணி
கட்டணம்: ரூ. 2, 1.



- முரசொலி -

★ இது ஒரு அரசியல் மேடை!
★ இது ஒரு சமுதாய அரங்கம்!
★ இது ஒரு இலக்கியப் பூஞ்சோலை!

என்றெல்லாம்
புகழப்படும் முரசொலியின் பொங்கல் மலர்
அறிஞர் அண்ணாவின் பொன்னோவியத்துடன்
கருணாநிதியின் கருத்தோவியங்களுடன்
வண்ணக் குவியலாய்—
எண்ணச் சுரங்கமாய்—

தயாராகிறது!

விலை 2 ரூபாய்

இப்போதே உங்கள் இதழுக்குப் பதிவு செய்துகொள்ளுங்கள்!

[விற்பனையாளர்கள் தங்களுக்கு வேண்டிய பிரதிகளை 28—12—57-க்குள் முன் பணம் அனுப்பி உறுதி செய்து கொண்டுவிட வேண்டுகிறோம்.]

[8—ம் பக்கத் தொடர்ச்சி]

புச் சட்டத்தை நீடிக்கிறாரோ அதை முளையிலேயே தடுக்க முடியவில்லை.

விளைவது விளைந்தபின் தடுப்புக் காவல் சட்டத்தை வைத்துக் கொண்டிருப்பதிலே என்ன பயன்?

வருமுன் தடுக்க முடியவில்லை. வந்தபின் தடுப்பதற்காகத்தான் இந்தக் 'கருப்புச் சட்டம்' என்றால் இதைவிட அரசாங்கத்திற்கு வெட்கக்கேடான செயல் வேறொன்றும்இருக்க முடியாது.

அப்படியே இருக்கட்டும்; முதுகுளத்தூர் வகுப்புக் கலவரங்களுக்கும்; திராவிடர் கழகத்தின் போராட்டத்திற்கும் மூலகாரணம் என்ன?

ஜாதி!

ஜாதி இருப்பதால்தான் அதைக் கருவாகக் கொண்டு முதுகுளத்தூரிலே கலவரம் முளைத்தது.

ஜாதி இருப்பதால்தான் அதை ஒழிக்க வேண்டுமென்று பெரியார் போராட்டம் துவங்கினார்.

ஆக; இது போன்ற நிகழ்ச்சிகள் இனி உபகண்டத்திலே எங்கும் நேராமல் இருக்க வேண்டுமானால் அதற்கு மருந்து தடுப்புக் காவல் சட்டமல்ல.

அரசாங்கம் மூல காரணத்தை — உடலை உருத்தும் நோயினைக் கண்டு பிடிக்க வேண்டும்.

நோயை நீக்கினால்தான் உடல் குணமாகும்!

காரணத்தைக் கண்டு பிடித்துக் களைந் தெறிந்தால் தான் அதன் தீய விளைவுகள் தடுக்கப்படும்.

அதை விட்டு இது போன்ற 'காட்டுமிராண்டிச் சட்டங்களை' நிறைவேற்றிக் கொண்டே போனால் சிறைச் சாலைகளை நிரப்புவதும்; ஜனநாயகத்தை எழுந்து நடமாட முடியாமல் படுகாயப் படுத்துவதும்தான் மிஞ்ச முடியும்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்[illegible]